Regd. No. M. 4392

ரயிலிலிருந்து சாமான்களை எடுத்து வரவோ வெளியூர்களுக்கு சாமான்களை அனுப்பவோ நீங்கள் சிரமப்பட வேண்டாம். விவரங்களுக்கு எழுதுங்கள்



மதராஸ் & தென் மராட்டா ரயில்வேக்கு லோகல் டெலிவரி கண்ட்ராக்டர்கள்

202-3, மவுண்டு ரோடு (போன் :-8536) மதராஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

உங்களுடைய கண்கள் விரைவில் களைப்படைகின்றனவா?



உங்கள் கண்கள் விரைவில் களைப் படைந்தாலும், நீர் பெருக் கெடுத்தாலும், வெந்தாலும், இருண் டாலும் — ஒவ்வொரு காலும் ஐகுல் சிச்சை உங்களுக்குத் தேவை. நீண்டகால பரிசோதனை யால் கண்டு பிடிக்கப்பட்ட ஐகுல் உங்களது கண்களுக்கு இன்றியமையாதது. வைத்திய முறைப்படி அடங்கிய மருந் துச் சேர்க்கை உங்கள் களைப் புற்ற கண்களுக்கு விரைவாக வும், ஜாக்கிரதையாகவும், வலி யில்லாமலும் சுகத்தை அளிக்கின் றது. காலை, மாலை, நித்திரைக்கு முன், இரண்டு சொட்டுகள் ஐகுல் விட்டுக்கொண்டால் உங் களது கண் பூரண ஆரோக்யத் துடனிருக்கும். மூக்குக் கண்ணாடி உபயோகிப்பதினின்றும் நீங்கள் விடுதலை பெறலாம்.

ஐகுல் சிறந்த தேர்ச்சிபெற்ற கண் வைத்தியர்களால் பரிசோ தித்து அங்கீகரிக்கப்பட்டது. இன்றே ஒரு பாட்டில் வாங்குங் கள். பாட்டில் ஒன்றின் விலை ரூ. 3. தபால் செலவு, பாக்கிங் செலவு அணா 12. ப்ரத்தியேகம்.



Eykul

EYE DROPS

பிரிட்டிஷ் டிரேடிங் கோ. டிபார்ட்மெண்ட் E. 7.

கெமிக்கல் பார்மஸுடிகல் லேபர் & மான்யுபாக்சரர்ஸ், தாமஸ் குக் & ஸன்ஸ் எதிரில், 327, ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

குழந்தைகளின் சரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு ஜம்பி வெங்கட்ராமணய்யாவின் லிவர்க்யூர்

●

அறிவிப்பு

எமது வைத்திய நிபுணர், ஜம்பி வெங்கட்ராமணய்யாவின் குமாரர் கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்கிறார். குழந்தைகளின் சரல் குலைக் கட்டி சம்பந்தமான வியாதி களுக்கு அவரை காலை 9 மணி முதல் 11-30 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் 5-30 மணி வரையிலும் கீழ்க்கண்ட இடங் களில் கண்டு பேசலாம்.

புதுக்கோட்டை

7-8-1944 ஹோட்டல் மானஸரோவர்

தேவக்கோட்டை

8-8-1944 மெஸர்ஸ். மீனாக்ஷி ஸ்டோர்ஸ்.

காரைக்குடி

9-8-1944 மெஸர்ஸ். A. V. & ஸன்ஸ், டிராவலர்ஸ் ரூம்ஸ்.

திருச்சிராப்பள்ளி

17, 18, & 19-8-1944 லிவர்க்யூர் ஆபீஸ், தேரடிக் கடைத் தெரு, தெப்பக்குளம்.

மதுரை

21 & 22-8-1944 T. N. C. நாகலிங்கம் பிள்ளை, வடக்கு சித்திரை வீதி.

திருவனந்தபுரம்

21 & 25-8-1944 மெஸர்ஸ். C. அருணாசலம் & கோ அல்லது M. V. கணபதி அய்யர் & ஸன்ஸ்.

தென்காசி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், பழநி, தஞ்சாவூர், முதலிய இடங்களுக்கும் விஜயம் செய்கிறார்.

●

ஜம்பி வெங்கட்ராமணய்யா & ஸன்ஸ்

கும்பகோணம் :: மதராஸ்


வைரம்
பொன்
வெள்ளி
நகைகளுக்கு
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
தந்தி: ராஜா - கோயமுத்தூர் - போன். 718A


தாய் சொல் மிக்க
வாசகமில்லை
லோத்ரா
கர்ப்பாசயரோக
நிவாரணி
கேசரி குடீரம் லிமிடெட், மதராஸ்

கல்கி



ALKI ஜுலை 30. 1944 4 அணா

4 Shades Whiter in 4 Weeks



சாஸ்திரீய முறையினால் கருத்த மேனி வெண்மையாகவும் மாசற்றதாகவும் மாறுகிறது.

அகத்தின் அழகை எடுத்துக் காட்டுவது முகம். அம் முகத்தின் கருமையை அறவே நீக்கி துல்லியமான வெண்மையும் பளபளப்பும் அளிப்பதற்கு சாஸ்திரீய ஆராய்ச்சியின் பயனாகக் கிட்டிய "ப்ளோரோஸோன்" ஓர் அபூர்வ வரமாகும். பல அரிய ரஸாசயனப் பொருள்கள் சேர்ந்த அமோனுக்ஸினுடன் ஓஸோன் என்னும் முக்கிய சத்தும் சேர்ந்ததே 'ப்ளோரோஸோன்.' முகப் பொலிவுக்கு இன்றியமையாத இவ்வரிய பொருள் ரோம துவாரத்தூடே வெகு தூரம் சென்று கருத்த சருமத்தை வெண்மை யாக்குவதுடன், போதுமான போஷாக்களித்து, பருக்கள் முதலிய கோளாறுகளையும் அகற்றி யௌவனப் பொலிவைத் தருகிறது. 'ப்ளோரோஸோன்', உபயோகிப்பது வெகு சுலபம். முற்றிலும் தீங்கற்றது. ஒரு பாட்டில் இன்றே வாங்கி உங்கள் முக வெண்மையை அதிகரியுங்கள். முழு சிகிச்சை (ஒரு பாட்டில்) ரூ. 4/8-க்கு தங்கள் வியாபாரியிடம் கிடைக்கும். அல்லது ரூ. 4/9 வி. பி. சார்ஜு உள்பட அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

'ப்ளோரோஸோன்' தற்போது கான்ஸென்டிரேட் கிரீமாக ஜாடி ஒன்றுக்கு ரூ. 5-12-0க்கு உங்கள் வியாபாரியிடம் கிடைக்கும். அல்லது ரூ. 5/13 வி. பி. சார்ஜ் உள்பட



எங்கும் கிடைக்கும்.

ப்ளோரஸ் லிட்., த. பெ. 875, பம்பாய். சென்னை ராஜதானி டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ஸவுத் இந்தியா ஏஜன்ஸீஸ், 117, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

பேபி பிராண்ட் அசல் நெய்

●

மணம், குணம், ருசி இவற்றில் ஒப்பற்றது. உணவின் ருசியை பன்மடங்கு அதிகப்படுத்துவது. சுவைக்கும், சுகத்திற்கும் உத்தமமானது. மனோரம்மியமான இந்த வாசனை மிகுந்த பேபி பிராண்ட் நெய்யை உபயோகியுங்கள்.

●

ராஜம் & கோ.,
கோயமுத்தூர்.

பற்கள் ஆடுகின்றனவா?
ஆனால் அவைகளுக்கு

"தைமோஸின்"

சிகிச்சை அளியுங்கள்.

ப்ரோச் பல் வைத்தியர் Dr. C. M. தேசாய், L. D. S. அவர்களின் மருந்து முறைப்படி தயாரித்தது. டூத் பிரஷ் அல்லது விரலினால் சில துளிகள் உபயோகித்தால் போதும். சரியாக பற்களின் காவியை அகற்றி, சொத்தை விழுவதைத் தடுத்து, பற்களை ஆரோக்யமாயும் வெண்மையாயும் செய்து, பயோரியா, ஈறு சம்பந்தமான வியாதிகள், வாய் வேக்காடு மற்றும், தொண்டை உபாதைகள் இவற்றைத் தடுக்கும்.

2 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2.
[illegible]
டென்டல் இன்ஸ்டிடியூட்
ஸேவா ஆஸ்ரமம், ப்ரோச்.

ஏஜண்டுகள்:
T. M. நாடார் & கோ.
1-10, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, ஜி. டி. மதராஸ்.

வீணை தனம்மாள்

ஆலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

இந்த அம்மாள் தேன்போன்ற சாரீரத்தை வடித்து வீணையுடன் கலந்து கச்சேரி செய்துகொண்டு வந்ததை நான் ரொம்பவும் அனுபவித்திருக்கிறேன். இவர் சங்கீத சாஸ்திரத்திலுள்ள சாரத்தைக் கிரஹித்து வீணை சகிதம் பிரயோகப் படுத்தினதானது மற்றவர்களுக்குச் சாத்தியப் படாது என்றே சொல்லலாம்.

ஒரு சமயம், ஒரு பண்டிகையை அனுசரித்துச் சென்னை வந்திருந்த அநேக வித்வான்கள் எல்லோரும் ஒரே தினத்தில் கச்சேரி கதைகள் செய்யும்படி கேட்டதில் தனம்மாள் கச்சேரியைக் கடைசியாக வைத்துக் கொண்டார்கள். மேற்படி தினத்தில் பகல் இரண்டு மணிமுதல் ஒவ்வொரு வித்வானுடைய கச்சேரியாக வரிசைக் கிரமத்தில் நடைபெற்றது. தஞ்சை ஸ்ரீகிருஷ்ண பாகவதர், சரபசாஸ்திரிகள், மற்றும் பல பிரபல வித்வான்களின் கச்சேரி எல்லாம் ஆனபிறகு, இரவு சுமார் 10 மணிக்குக் கடைசியாகத் தனம்மாளுடைய கச்சேரி ஆரம்பமாயிற்று.

எல்லா வித்வான்களும் ஒருங்கு கூடி சதஸை அலங்கரித்தார்கள். தனம்மாள் பைரவி ராகம் பாடி "ஜெய ஜெய கோ" என்று பாட ஆரம்பித்தவுடன், கச்சேரி செய்யுமிடத்திலிருந்து சற்று தூரத்தில் சிரமபரிகாரம் செய்து கொண்டிருந்த ஸ்ரீ வேணுகானம் சரப சாஸ்திரிகள் அவர்களை இந்த கானம் ரொம்பவும் ஆகர்ஷணம் செய்தது. உடனே அவர் கொஞ்சமும் சிரமத்தைப் பாராட்டாமல் எழுந்திருந்து "நானும் அங்கு வந்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு முன்னாடி வந்து உட்கார்ந்து கச்சேரியை எல்லையில்லா மகிழ்ச்சியுடன் அனுபவித்தார். இதிலிருந்து இந்த கானத்தின் பெருமை எவ்வளவு உயர்ந்தது என்பது நன்கு விளங்குகிறது.

ஸ்ரீ தியாகப் பிரும்மத்தின் கீர்த்தனங்கள், க்ஷேத்ரக்ஞர் பதங்கள், தீக்ஷிதர் கிருதிகள், மற்றுமுள்ள ஜாவளி முதலியவற்றில் தனம்மாள் எதை எடுத்துப் பிரயோகம் செய்தாலும் அப்பொழுது, வேறொன்றும் இதற்கு ஈடாகாது என்று சொல்லும்படியாயிருக்கும். ஸ்வர ஞானமிருந்தும் இவர் ஸ்வரம் பாடாமல் சாஹித்யங்களை மாத்திரம் பாடிக் கச்சேரி செய்ததானது ராகம் பல்லவி ஸ்வரம் பாடிக் கச்சேரி செய்கிற அநேக வித்வான்களைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கும். இவருக்கு ஏராளமான கிருதிகளும் பதங்களும் பாடாந்தரமுண்டு. அசகாய சூராய் விளங்கின திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் தனம்மாளுடைய கானத்தில் எல்லையில்லா மதிப்பும், அன்பும் கொண்டிருந்தார் என்றால், இவரது கானத்தின் பெருமையை நிரூபிக்க வேறு அத்தாட்சியும் வேண்டுமோ?

எல்லாக் கிருதிகளும் உயர்தரமாய் இவரிடத்தில் விளங்கினாலும் முக்கியமாய் "க்ஷீரஸாகர சயன" என்ற தேவகாந்தாரி ராகக் கீர்த்தனையின் சரணமான "நாரிமணிகி" என்ற இடத்தை இவர் சஞ்சரித்துக் கையாண்டது போல், நானது பரியந்தம் ஒருவரும் கையாண்டதுமில்லை, கையாளவும் முடியாது என்று திண்ணமாய்ச் சொல்லலாம். தனம்மாளுடைய அனுக்ரஹத்தாலேயே, இவரது பரம்பரை சங்கீதத்தில் தேர்ச்சியுடன் விளங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

அவநம்பிக்கை !



"என் இன்ஷ்யூர் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். எங்கள் கம்பெனியின் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"இல்லை: நான் வேலை செய்யும் கம்பெனியில் தான் எனக்கு நம்பிக்கை இல்லை."

புரண்டு கொண்டிருந்தான். வெளியே பால் போல் வெண்ணிலா காய்ந்து கொண்டிருந்தது. மணி இரண்டடித்தாகி விட்டது. நிர்மலாவின் கணவர் இன்னும் ஆபீஸிலிருந்து திரும்பவேயில்லை. நிர்மலாவின் கணவரை நினைக்கவே அவளுக்குப் பரிதாபமாயிருந்தது. "பாவம், இராப் பகலாய் உழைக்கிறார்!" என்று அவருக்காக அவள் அனுதாபப் பட்டாள்.

இந்தச் சமயத்தில் வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்கவே ஸரஸா அறையை விட்டு பால்கனி பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள். அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிடச் செய்தது. நிர்மலாவின் கணவருக்குப் பக்கத்தில் ஒரு ஆங்கிலோ இந்திய மாது வந்து கொண்டிருந்தாள். அவரது கை அவளது தோளின் மேலிருந்தது.

பின்னால் விம்மல் சத்தம் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினாள். நின்று கொண்டிருந்தது நிர்மலா. ஸரஸா திரும்பியதும் நிர்மலா விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். "ஸரஸா, என் கணவரது போக்கியதை இப்பொழுது தெரிந்ததா? உன் கணவரைப் போல் எல்லோருமே இருப்பார்கள் என்று நினைக்காதே. எல்லாம் நான் செய்த பாவம்" என்று கூறிக் கொண்டே அவள் தன் அறைக்குச் சென்று விட்டாள்.

நிர்மலாவின் வார்த்தைகள் ஸரஸாவின் மூடியிருந்த கண்களைத் திறந்து விட்டன. நிர்மலாவின் கணவர் அவள் பேரில் உண்மையாய்க் காதல் வைக்காததினால்தான் அவளை அவ்வளவு சுயேச்சையாய் விட்டுவிட்டு, அவள் காரியங்களில் தலையிடாமல் விலகியிருந்தார் என்பது அவளுக்குப் புலனாயிற்று. தன் கணவன் தன் பேரில் உயிரையே வைத்திருப்பதினால்தான் எந்த அற்ப விஷயமும் அவர் கண்ணில் படுகிறது என்று அவளுக்குத் தோன்றியது.

அதற்குப் பிறகு அங்கே அவளால் ஒரு நிமிஷம் கூட நிற்க முடியவில்லை. அன்றே பட்டணத்திற்குக் கிளம்பினாள்.

அவள் தன் வீட்டை அடைந்த போது, வெங்கட்ராமன் விழுந்து விழுந்து அடுப்பை ஊதிக் கொண்டிருந்தான். அடுப்பு பற்றும் வழியாயில்லை. ஸரஸாவிற்கு அந்தக் கோலத்தில் தன் கணவனைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. "சமையலுத்தியோகம் பண்ணினது போதும். இனிமேல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவன் கையிலிருந்த ஊது குழலை வாங்கிக் கொண்டாள்.

"அப்பாடி! பம்பாய் வாசம் இப்பொழுது தான் விட்டதோ? எங்கே பம்பாயிலேயே குடித்தனம் போட்டு விடுவாயோ என்று பயந்து விட்டேன்!" என்றான் வெங்கட்ராமன்.

"ஏன் அங்கேயே இருந்தாலென்னவாம்? நீங்களில்லா விட்டால் வேண்டுமானால் குடித்தனம் நடக்காது. நானில்லாவிட்டால் என்ன? நான்தான் கோபுரத்தைத் தாங்குகிறேனே?"

"சீ, அப்படிச் சொல்லாதே. ஏதோ தமாஷுக்குச் சொன்னதையெல்லாம் மனதிலே வைத்துக் கொள்ளலாமோ? என்னுடைய கிருஹலக்ஷ்மி இல்லாமல் எனக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்தது தெரியுமோ?" என்று வெங்கட்ராமன் ஆசையுடன் அவளை நெருங்கினான்.

ஸரஸாவின் முகம் நாணத்தால் சிவந்தது.





ஒரு சினிமாக் கொட்டகையில் இன்டெர்வெல் நேரம் கழிந்ததும் பின்வரும் சம்பவம் நடந்தது. அந்த இருட்டில் வெளியிலிருந்து வந்த ஒரு மனிதர் தம் ஸீட்டைத் தேடிக் கொண்டு வந்தார். ஒரு வரிசையின் ஓரமாக உட்கார்ந்திருப்பவரிடம் போய் "ஐயா! நான் வெளியில் போகும்போது உங்கள் காலைத்தானே மிதித்து விட்டுப் போனேன்?" என்று பவ்யமாகக் கேட்டார். அந்த மனிதர் தம் காலை மிதித்துவிட்டதற்காக மன்னிப்புக் கேட்கத்தான் விசாரிக்கிறார் என்று நினைத்து, "ஆமாம் ஸார்! என் காலைத்தான் மிதித்துவிட்டுப் போனீர்கள்! அதனால் பரவாயில்லை" என்றார். அதற்கு அந்த மனிதர் அவர் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், "அப்படியானால் உங்கள் பக்கத்தில்தான் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன்!" என்று சொல்லிக்கொண்டே தம் ஸீட்டிற்குப்போய் ஜம்மென்று உட்கார்ந்துகொண்டார்!

இருக்கா? உன்னைக் கலியாணம் பண் ணிண்டவனுக்கு வாழ்க்கையிலே சந்தோஷம் எங்கே யிருந்து வரப்போகிறது?" என்று கூறிக்கொண்டே காப்பியை எடுத்து ஒரு வாய் ஊற்றிக் கொண்டான்.

அவ்வளவுதான்; காப்பி டம்ளர் பறக்க ஆரம்பித்து விட்டது. "என்ன காப்பி இது? சர்க்கரையுமில்லை, சூடுமில்லை. இந்த மாதிரி காப்பி கொடுக்கிறதற்குக் கொடுக்காமலே இருக்கலாம்" என்று சொல்லிக் காப்பியைக் கீழே கொட்டி விட்டான். "சீ, இந்த வீட்டில் இருக்கிறதே கஷ்டம். ஆபீஸிற்குப் போனாலாவது வேலை முடியும்" என்று முகத்தை அலம்பிக் கொண்டு தலையை வாரிக்கொள்ளச் சீப்பை எடுத்தான்.

அன்று சீப்பிற்கு ஆயுசு முடிய வேண்டிய காலம் போலிருக்கிறது. அதில் ஒரே அழுக்காயிருந்தது. அதைப் பார்த்ததும் வெங்கட்ராமனுக்கு அசாத்தியக் கோபம் வந்து விட்டது. "அப்பா, என்ன குடித் தனம் வேண்டி யிருக்கு? தரித்திரம்! தலையை வாரிக்கொண்டால் சீப்பைச் சுத்தம் செய்து வை என்று எத்தனை தரம் சொல் றது? சொல்லச் சொல்ல செவிடன் காதிலே சங்கு ஊதற மாதிரிதான். இந்தச் சீப்பு இருந்தால்தானே இப்படிப் பண்ணச் சொல்லுகிறது? சீப்பே யில்லாதிருந்தால்—" என்று சொல்லிச் சீப்பை வெடுக்கென்று இரண்டாய் உடைத்து வீசியெறிந்து விட்டு வெளியே போய்விட்டான் வெங்கட்ராமன்.

வெங்கட்ராமனுக்குக் கோபம் வந்து விட்டால் விடே இரண்டுதான். அதற் கென்று கோபம் அக்கி பூத்தாற்போல் வந்தால் தேவலை. அதுவும் கிடையாது. கோபம் வராத நாள் அபூர்வம். இந்த லட்சணத்தில் ஸரஸாவுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனதில் ஆச்சரிய மொன்று மில்லை.

2

ஸரஸாவின் தங்கை நிர்மலாவிட மிருந்து அன்று ஒரு கடிதம் வந்தது. அதில் அவள் முடிந்தால் ஸரஸாவை பம்பாய்க்கு வந்து ஒரு மாதம் இருந்துவிட்டுப் போகும் படி எழுதியிருந்தாள். இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் ஸரஸாவிற்கு பம்பாய்க்குப் போய்க் கொஞ்ச நாளாவது கணவனது கச்சரிப்பில்லாமல் இருக்க வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று.



அன்று இரவு வெங்கட்ராமன் வெகுநேரம் கழித்து வந்தான். வந்து நுழைந்ததும் அவன் கண்ணில் பட்டது கீழே விரித்திருந்த இரத்தினக் கம்பளத்தின் ஓரத்திலிருந்த ஒரு சிறு கறைதான். அதைப் பார்த்ததும் வெங்கட்ராமன், "அடியே! இங்கே வா. இந்த இரத்தினக் கம்பளத்தில் கறை என்ன மாய் வந்தது?"

"ஆமாம், சொல்லமாட்டேனா? எல்லா வற்றிற்கும் நான்தான் அகப்பட்டேன் போலிருக்கு. இன்னிக்கு மத்தியானம் காப்பி யைக் கொட்டின ஆசாமிதான் இந்தக் கம்பளத்திலும் தன் கைவரிசையைக் காண் பித்து விட்டார்" என்றாள் ஸரஸா.

"சரி, காப்பிக் கறைன்னு தெரியு மொன்னே, என் அப்பவே அதைத் துடைத் துச் சுத்தமாக்கவில்லை? ஏது, நீ குடும்பத் திலே ஒட்டி அக்கரையாய் வேலை செய் தால்தானே இதெல்லாம் தெரியப் போகிறது? ஏதோ தண்டத்திற்குப் பொங்கிக் கொட்டிக் கொண்டு இருந்தால்......?"

ஸரஸாவிற்குக் கண்ணீர் மளமளவென்று வந்துவிட்டது.

"ஏன் இப்படி எல்லாவற்றுக்கும் என் மேலேயே எரிந்து விழுகிறீர்கள்? இன்னிக்கு மத்தியானம் மூன்று ரூபாய்ச் சீப்பை உடைத்து எறிந்தேனே, அதிலே படிந்திருந்த அழுக்கு உங்களுடையதுதான். நீங்கள் வாரிண்டு போனபிறகு நான் அதை எடுக்கவே இல்லை."

"என், இருந்தாலென்ன? அதை நான் தான் எடுத்துச் சுத்தம் செய்து வைக்க வேண்டுமோ?"

"பாவம்! எல்லா வேலையும் தானே செய்கிறாப் போலத்தான் பேச்சு! நான் ஒரு நாள் வீட்டிலில்லாதிருந்தால்தானே தெரியும்!"

"ஐயய்ய! கோபுரத்தைப் பொம்மைதானே தாங்குகிறது? நீ இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது என்று நினைத்துவிட்டாயோ? போ போ, இன்னிக்கே கிளம்பு."

"நான் கிளம்பத் தயார். என் தங்கை வரச் சொல்லி எழுதியிருக்கிறாள். நானும் போகத்தான் போகிறேன்."

வெங்கட்ராமன் தடையே சொல்லவில்லை. மறுநாள் இரவே ஸரஸா பம்பாய்க்குக் கிளம்பிவிட்டாள்.

3

ஸரஸா பம்பாய் சென்று பத்து நாட்களாகி விட்டன. பம்பாய் வாசம் அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. கணவனது கோப தாபத்துக்கெல்லாம் ஆளாகாமல் கொஞ்ச நாளாவது நிம்மதியாக இருக்க வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்த அவளுக்கு நிர்மலாவுடனிருப்பது தேவலோகத்திலிருப்பது போலிருந்தது. நிர்மலாவின் அகத்துக்காரர் வீட்டிற்கு வருவதும் தெரியாது, போவதும் தெரியாது. அவர் நிர்மலா விஷயங்களில் தலையிடுவதே கிடையாது. சமையற்காரன் சமைத்துப் போட்டால் சாப்பிட வேண்டியது. சாப்பாடானதும் 'கிளப்'பிற்குப் போய்விட வேண்டியது. திரும்பவும் மூன்று அல்லது நான்கு மணிக்கு வரவேண்டியது. அதற்கப்புறம் கடைக்கோ கண்ணிக்கோ போகிறது. அப்புறம் சினிமா. அதுவும் தப்பினால் சிநேகிதிகள் வீட்டிற்குப் போக வேண்டியது. கூண்டிலடைபட்ட கிளிபோல் வீடு உண்டு தானுண்டு என்றிருந்த ஸரஸாவிற்கு இந்த வாழ்க்கை பிடித்ததில் ஆச்சரியமென்ன?

அன்று ஒரேயடியாய் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. அதனால் ஸரஸாவும் நிர்மலாவும் வெளிக் கிளம்பவே முடியவில்லை. அன்றுதான் ஸரஸாவிற்கு வெங்கட்ராமனிடமிருந்து ஒருகடிதம் வந்திருந்தது. அதில் வெங்கட்ராமன், 'உனது அருமை சமையலுள்ளும், இரண்டு கனகாம்பரச் செடிகளும் உன் பிரிவாற்றாமையினால் கண்ணீர் விடுகின்றன!' என்று எழுதி, அதனடியில் சமையலுள்ளும் பக்கத்தில் இரண்டு செடிகளும் கண்ணீர் வடிப்பது போல் சித்திரம் வரைந்திருந்தான். அதைப் பார்க்க ஸரஸாவிற்குச் சிரிப்பாயிருந்தது. பக்கத்திலிருந்த நிர்மலா, "என்னடி, பல் சுளுக்கிக் கொள்ளும்படியாய் அகத்துக்காரர் என்ன எழுதியிருக்கிறார்?" என்று அவளிடமிருந்த கடிதத்தைத் தன் கையில் வாங்கிக் கொண்டாள். ஸரஸாவிற்கு இந்தக் கடிதத்தை அவளிடம் கொடுப்பதில் இஷ்டமேயில்லை. எங்கே அவள் தன் கணவனை ஒரு பைத்தியக்காரன் என்று நினைத்துக்கொண்டு விடுவாளோ என்று பயம்.

அட! கடிதத்தைப் பார்த்ததும் நிர்மலாவின் முகத்தில் ஏன் ஒருவிதமான சோகக்குறி தோன்றி மறைந்தது? ஸரஸாவிற்கு ஒன்றுமே புரியவில்லை.

தன் சகோதரிக்கு இந்தமாதிரி முட்டாளாய் ஒரு அகமுடையான் வாய்த்திருக்கிறானே என்று பரிதாபப்படுகிறாள் போலிருக்கு என்று விட்டுவிட்டாள்.

அன்று இரவெல்லாம் ஏனோ ஸரஸாவிற்குத் தூக்கமே வரவில்லை. என்னவெல்லாமோ யோசனை செய்து கொண்டு





ஸரஸுவின் கணவன்

★

பாரு

★

'டிக், டிக், டிக்' — வாசலி லிருந்து வந்த இந்த சைகிளின் மணியின் சத்தம் ஸரஸுவின் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. அவள் வெகு மும்முரமாகத் தேங்குழல் பிழிந்து கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வாசற் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே, "யாரது?" என்று கேட்டுக்கொண்டே போய்க் கதவைத் திறந்தாள். கதவைத் தட்டினது வேறு யாருமில்லை. அவள் கணவன் வெங்கட்ராமன்தான்.

அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. ஸரஸு வெங்கட்ராமனைப் பார்த்தால்தானே அவன் முகம் எப்படி யிருக்கிறது என்று தெரியப் போகிறது? கதவைத் திறந்து விட்டு, அடுப்பில் போட்ட தேங்குழல் தீய்ந்து விடப் போகிறதே என்று சமைய லறைக்குள் புகுந்து விட்டாள். வந்த புருஷனை ஏறெடுத்துக்கூடப் பார்க்காமல், "என்ன, ஏன் இத்தனை சீக்கிரமாய் வந்துட்டேள்? உடம்புக்கு என்ன?" என்று ஒரு கேள்விகூடக் கேட்காமல், சமையலுள்ளுக்குள் ஓடினதைப் பார்க்க அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

கொஞ்ச நேரத்திற் கெல்லாம் ஸரஸு ஒரு தட்டில் தேங்குழலும் ஒரு டம்ளரில் காப்பியும் கொண்டு வந்து எதிரில் வைத்தாள். வெங்கட்ராமனுக்கு அவளது எண்ணெய் வடியும் முகத்தையும் 'ஹோ' வென்றிருக்கும் பரட்டைத் தலையையும் பார்க்கப் பார்க்க ஆத்திரம் பன் மடங்கு அதிகரித்தது.

"அப்பாடி! ஆம்படையான் ஒருத்தன் இருக்கான் என்கிற ஞாபகம் இப்பொழுது தான் வந்ததா? ஏதடா, ஒரு புருஷன் வழக்கத்தைவிட இன்று சீக்கிரம் வந்துட்டானே என்று சந்தோஷ மிருக்கா, பார்! சீக்கிரம் வரவில்லை யென்றும் ரொம்ப அக்கரை யுள்ளவளாட்டம், 'ஏன் நாழி?' என்று கேட்கிறது. சீக்கிரம் வந்து விட்டாலோ, சமையலுள்ளுக்குள்ளே புகுந்து கொண்டு விடறது! சமையலுள்ளே அப்படி என்ன தான் வெட்டி முறிக்கிறாயோ! ஒரு புருஷன் ஆபீஸிலிருந்து, நாளெல்லாம் வேலை செய்து விட்டு வருகிறானே, அவன் வருகிறபொழுது தலையை வாரிப் பின்னிண்டு, சுத்தமா யிருப்போம்னு



லைச் சுற்றுமுற்றும் பார்த்தான். உடனே அவனுக்கு முள்ளின்மேல் இருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அந்த இடம், அதிலுள்ள நாற்காலி, மேஜை, தொங்கு மணி எல்லாம் ஒன்றும் அவனுக்குச் சொந்தம் இல்லை என்ற நினைவு உண்டாயிற்று.

மறுவினாடி, இந்தக் கவலை எண்ணம் போய், சுவாமிநாதனைப்பற்றிய நினைவு வந்தது. தங்கையின் பேச்சில் அவன் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பதை நினைக்க நினைக்க அவன் மனத்தை என்னவோ செய்தது.

மாலை சுவாமிநாதன் அவள் எதிர்பார்த்த படியே வீட்டுக்கு வந்தான். அம்புஜம் மெதுவாக அவனருகில் சென்று, "பானு சொன்னதை நீங்கள் பெரிதாகப் பாராட்டக் கூடாது. ஏதோ அவள் விவரம் தெரியாதவள்; அதற்காக நீங்கள்......" என்று ஆரம்பித்தாள்.

சுவாமிநாதன் முகத்தில் புன்னகை அரும்பிற்று.

"தயவு செய்து அவளை நீங்கள் மன்னித்து விடுவீர்களா?" என்றாள் அம்புஜம்.

"அம்புஜம்! அவள் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள இஷ்டப்படாவிட்டால் நான் வருத்தப்படவில்லை. உண்மையில், நான் அவளைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று எப்பொழுதுமே ஆசைப்படவில்லை."

அம்புஜத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. "ஆனால் வேறொருவர் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன் என்றால்தான் எனக்கு வருத்தமாயிருக்கும்" என்றான் சுவாமிநாதன் மேலும்.

"யார் அந்த வேறொருவர்? யார் அந்த அதிர்ஷ்டசாலி?" என்றாள் அம்புஜம்.

"அம்புஜம்! உனக்கு இன்னும் தெரியவில்லையா?............அந்த வேறொருவர் நீதான் என்பது உனக்கு இன்னும் தெரியவில்லையா? உனக்காகவே நான் உங்கள் குடும்பத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டேன். உன்னைப் பார்க்கவேதான் நான் அடிக்கடி வந்து கொண்டிருந்தேன். ஆனால் நீ என்னோடு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. உள்ளே ஓடிப்போய் விடுவாய். உன்னோடு ஒரு வார்த்தையாவது பேசமாட்டோமா என்று வருவதும் கடைசியில் நான் பானுவோடு பேசிவிட்டுத் திரும்புவதும் வழக்கமாகி விட்டது. ஆமாம்; நீ ஏன் என்னோடு கலகலப்பாகப் பேசுவதே இல்லை?"

"நீங்களும் படித்தவர்; பானுவும் படித்தவள் — ஆகையால் உங்கள் இருவருக்கும் தான் ஜோடி என்று நினைத்து நான் ஒதுங்கிக் கொண்டேன்."

"நீ இவ்வளவு அழகாயிருந்துகொண்டு இவ்வளவு குணசாலியா யிருந்துகொண்டு நீ எப்படி அவ்விதம் நினைத்துக் கொள்ளலாம்?" என்றான் சுவாமிநாதன்.

"அதற்குத்தான் அக்கா இன்னும் கொஞ்சம் படித்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன்" என்ற குரல் கேட்டு அம்புஜமும் சுவாமிநாதனும் திரும்பிப் பார்த்தார்கள். பானு எதிரில் வந்து நின்றாள்.

"போதுமடி, போதும்!" என்றாள் அம்புஜம் முகம் சிவக்க.

"நீ அவரைக் கண்டு உள்ளே ஓடி ஓடி ஒளிந்து கொண்டதைப் பார்த்து, உனக்கு அவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டம் இல்லையோ விருக்கிறது; ஆகையால் உன்னைக் கட்டாயப் படுத்த வேண்டாம் என்று சொன்னார். ஆனால் நானும் ஜாடைமாடையாகப் பல தடவை இந்த விஷயத்தை உனக்குச் சொல்லிப் பார்த்தேன். நீ புரிந்து கொள்ளவில்லை. கடைசியில்தான் நீ அவரோடு நேரில் பேசுவதற்காக இந்தத் தந்திரம் செய்தேன். அக்கா! இப்பொழுதாவது புரிந்ததா? ஸ்ரீமான் சுவாமிநாத ஐயர் அவர்கள் ஸ்ரீமதி அம்புஜம்மாளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்புகிறார் என்று!"

"மகா கெட்டிக்காரிதான் போ!" என்று அம்புஜம் சொல்லிக் கொண்டிருக்கையில் அவளது கரு விழிகள் சுவாமிநாதன் முகத்தை ஒரு கணம் பார்த்துவிட்டுத் திரும்பின.

அப்பொழுது ஆனந்தமும் பெருமையும் அவன் முகத்தில் அதி விசித்திரமான மாறுதல்களை உண்டாக்கிக் கொண்டிருந்தன.



உபாத்தியாயர் :—முண்ட வீரா, உனக்கு அய்யன் படிக்கப் படிக்கப் புத்தி சொன்னது உன் காதில் ஏற வில்லையா?

பையன் :—படிக்கப் படிக்கச் சொன்னார் என்கிறீர்களே, எங்க அப்பாவுக்கும் படிக்கவே தெரியாது, ஸார்!



நரையுடன் இருப்பவர் என்று நேயர்கள் நினைக்கக்கூடாது. சுவாமிநாதன் அம்புஜத்தை விட ஐந்து வயது பெரியவன். பானுமதிக்கும் அம்புஜத்திற்கும் இரண்டு வயதுதான் வித்தியாசம்; ஆகையால் கொஞ்சம் கூட்டல் கணக்குப் போட்டு பானுமதியை விட சுவாமிநாதன் எவ்வளவு பெரியவன் என்பதைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

“ஆமாம்; அவரைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டாயே, அதனால் யாருக்கு கஷ்டம் என்பதைக் கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாயா?” என்றாள் அம்புஜம்.

பானுவின் நடத்தையால் என்னென்ன விபரீத பலன்கள் விளையும் என்பதை எண்ணிப் பார்க்கையில் அம்புஜத்தின் மனம் திகிலென்றது.

அம்புஜமும் பானுமதியும் செல்வத்தில் பிறந்து சிறப்பாக வளர்ந்து கொண்டிருந்தவர்கள். தாயில்லாப் பெண்களைத் தகப்பனார் எவ்வளவோ அருமையாக வளர்த்து வந்தார். குழந்தைகள் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பதற்காகப் பணத்தைத் துரும்பாக மதித்துச் செலவு செய்து வந்தார்.

ஒரு தாய் வயிற்றுப் பெண்களாயினும், அம்புஜத்துக்கும் பானுமதிக்கும் எவ்வளவோ வேற்றுமை இருந்தது. அம்புஜம் நல்ல அழகி. பானுமதி மாநிறம்தான். அம்புஜம் படிப்பில் பூஜ்யம். பானுமதியோ வகுப்பில் முதலாவதாகத் தேறி பி. ஏ. வகுப்புக்கு வந்தாள்.

பானுமதி இருக்குமிடம் எப்பொழுதும் கோலாகலமாகத்தான் இருக்கும். அந்த இடத்தில் எப்பொழுதும் வேடிக்கையும் விளையாட்டும் சிரிப்பும்தான். அம்புஜம் இருக்கும் இடத்தையோ தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். அவள் அவ்வளவு அடக்கம்.

பானுமதி பி. ஏ. படித்துக்கொண்டிருந்த சமயத்தில் எதிர்பாராத விபத்து ஒன்று நேர்ந்தது. தகப்பனாருக்குத் திடீரென்று ஹிருதய நோய் கண்டு காலமானார். தந்தையை இழந்த பெண்களின் நிர்க்கதியைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? தகப்பனாரை இழந்த துக்கத்தைவிட, இன்னொரு விபத்தும் தங்களுக்கு நேர்ந்திருப்பதை அறிந்ததும் அவர்கள் துக்கம் தாங்கவில்லை. அவர்கள் வீடு வாசல் நில புலன்கள் எல்லாம் ஜப்திக்கு வரும் என்பதையும் அறிந்தார்கள். இந்த சமயத்தில்தான் மாமா சுவாமிநாதன் அவர்கள் உதவிக்கு வந்து, கடனை அடைத்தான்.

அதிலிருந்து சுவாமிநாதன் உதவியால்தான் இருவரும் வாழ்ந்து வந்தார்கள். முன் போலவே அவர்களுக்கு ஒரு குறைவும் இல்லை. எல்லாச் செலவுக்கும் சுவாமிநாதன் பணம் கொடுத்து வந்தான். அவனுக்கு இது ஒரு பிரமாதம் இல்லை. சென்னையில் ஒரு காலேஜில் புரொபஸராயிருந்தான். ஏராளமான சொத்தும் அவனுக்கு இருந்தது.

“இப்படி எத்தனை நாள் நாம் பிறர் தயவில் இருப்பது?” என்பதைப் பற்றி அம்புஜமும் பானுவும் நினைத்துப் பார்க்காமல் இல்லை. “இன்னும் கொஞ்ச நாள் போனால் பணம் சம்பாதித்துத் திருப்பிக் கொடுத்து விடலாம்” என்பாள் பானுமதி ஒரு சமயம். “ஏன் நமக்குக் கல்யாணமாகிப் புக்ககம் போய்விட்டால், நமது கணவர்களாக வருகிறவர்கள் நம் கடனை அடைக்கமாட்டார்களா?” என்பாள் இன்னொரு சமயம்.

ஆனால் அம்புஜம் “கல்யாணம் செய்து கொள்பவர் ஏன் கடனை அடைக்கவேண்டும்? கடனை அடைத்தவரைத்தான் கல்யாணம் செய்து கொண்டு விடேன்” என்று கேட்டு விடுவோமோ என்று பார்த்தாள். ஆனால் அவள் கேட்கவில்லை. ஏனெனில், சுவாமிநாதன் அந்திபூத்தாற்போல் அவர்களைப் பார்க்க வரும் சமயங்களில் பானுமதி முகத்தில் ஆனந்தம் பொங்க, மெய்சிலிர்க்க, அவனை வரவேற்பாள். அவனை அம்புஜத்துடன் ஒரு வார்த்தை பேசக்கூட விடமாட்டாள். அவன் வந்துவிட்டுப் போகும்வரை வீட்டில் பானுமதியின் ஆட்டபாட்டம்தான்; அவள் ராஜ்யம்தான். பானுமதியின் பேச்சிலும் சிரிப்பிலும் சுவாமிநாதன் மதிமயங்கிப் போயிருந்தான் என்பதில் சந்தேகம் இல்லை.

அநேகமாக இருவருக்கும் கல்யாணமாகி விடும் என்று அம்புஜம் நினைத்திருந்த சமயத்தில்தான் பானு பெரிய கல்லாய்த் தூக்கிப் போட்டது.

இதுவரை நடந்த சம்பவங்களை யெல்லாம் யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அம்புஜம் சட்டென்று சுய நினைவு வந்த

அம்புஜம் அதிர்ஷ்டசாலி!

வஸந்தன்



பானு கூறிய வார்த்தைகளைக் கேட்டதும், அம்புஜத்திற்கு ஒரு கணம் உலகமே அஸ்தமித்து விட்டதுபோல் தோன்றிற்று. அவள் கட்டியிருந்த மனக்கோட்டை அந்தக் கணத்தில் சுக்கு நூறாகச் சிதறிவிட்டதை அறிந்தாள்.

"நிஜமாகவே அவரிடம் அப்படிச் சொல்லி விட்டாயா? வாஸ்தவம்தானா?" என்று மறுபடியும் மறுபடியும் அவள் தன் தங்கையைக் கேட்டாள்.

"ஆமாம்; ஆமாம்! சொல்லிவிட்டேன்; சொல்லி விட்டேன்! இந்த மேஜையின்மேல் வலது கையை ஊன்றிக் கொண்டுதான் சொன்னேன். அப்பொழுது அவர் அந்த ஈஸிசேரில் சாய்ந்து கொண்டிருந்தார். வேலைக்காரி அலமுகூட அப்பொழுது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை வேண்டுமானால் நீ கேட்டுப் பார்!" என்றாள் பானுமதி.

"ரொம்ப சமத்துத்தான் போ! இவ்வளவு அழகாகப் பேசிவிட்டாயோ இல்லையோ? ஆமாம்; இதுமாதிரி கூடப் பேசத் தெரியா விட்டால் பி. ஏ. படித்துத் தான் என்ன பிரயோஜனம்?" என்றாள் அம்புஜம் ஆத்திரத்துடன்.

"எத்தனை காலத்துக்குத்தான் இந்த மாதிரி வேஷம் போடச் சொல்கிறாய்? நான் நிச்சயமாக அவரைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாது. நான் நன்றாக யோசனை செய்துதான் அவரிடம் சொன்னேன், அக்கா!"

'அவர்' என்று பானுமதி குறிப்பிட்டது அவர்களது சாக்ஷாத் மாமாவான சுவாமிநாதனைத்தான். மாமா என்றால் தொந்தியும் தொப்பையுமாக, வழுக்கைத்


ஹெல்மட் எங்கே?
A.R.P.
1
A.R.P.
ஏ. ஆர். பி. சங்கு அலறி யதைக் கேட்டு,
2
ஏ. ஆர். பி. ஏகாம்பரம் உள்ளே ஓடி,
3
'ஹெல்மெட்'டைத் தேடி,
4
அதை எங்கும் காணாமல்
5
வேகமாகச் சமையலறைசென்று
6
இரும்புச் சட்டியைத் தலை யில் கவிழ்த்துக் கொண்டு வெளிக்குச் சித்தமானார்.
7
அவர் மனைவியோ இரும்புச் சட்டியைத் தேடிப் போய்,
6
!!
A.R.P.
'ஹெல்மட்'டைக் கண்டாள்.
9
A.R.P.
சாமா
அதை வைத்து, அப்பளம் பொரித்தாள்!

ளைப் பார்க்கிறோமா? ராஜாஜி கட்சியா அல்லது காந்தி கட்சியா……அதுதான் இப்பொழுது இரண்டு கட்சியும் ஒரு கட்சிதான், சுயராஜ்யம் சம்பாதிக்கும் கட்சிதான் என்று ஆகி விட்டதே!— ஆகவே இந்த வித்தியாசத்தையும் நாம் பாராட்டுவதில்லை.

யாராயிருந்தாலும் சரி, எல்லாரும் நமக்குச் சமம். "எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள்." ஆகவே நாம் தமிழ் சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் வாங்கும்போது ஜாதி வித்தியாசம், மத வித்தியாசம், கொள்கை வித்தியாசம் எதுவும் பாராட்டுவதில்லை. யாராய் இருந்தாலும் சரி, ஒன்றுதான், என்று அவர்களைக் கழுத்தைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு, முன்னால் செல்கிறோம்.

க்யூ வரிசையில் நிற்கும் வழக்கம் பரவி விட்டால், நமது ஐக்ய பாவம் இந்த ரீதியில் வளர்வதற்கு வழியுண்டா, நீங்களே சொல்லுங்கள்!

அடுத்தபடியாக, இந்தப் பழைய வழக்கத்தினால் ஏற்படும் இன்னொரு நன்மையைக் கேளுங்கள். எவ்வளவுக் கெவ்வளவு நாம் கஷ்டப்பட்டு டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே செல்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம் மனத்துக்குச் சந்தோஷமாக இருக்கிறது. டிக்கட் கிடைத்த சந்தோஷத்தில் கொட்டகைக்குள் உள்ள குறைபாடுகள், கஷ்டங்கள் நம் கண்ணில் தென்படுவதே இல்லை.

உள்ளே எவ்வளவு இறுக்கம் புழுங்கட்டும், மூட்டைப் பூச்சிகள் கடிக்கட்டும், படம் மண்ணாக இருக்கட்டும், நாம் கவனிப்பதே யில்லை. நாம் டிக்கட் வாங்கின சாமர்த்தியத்தைப் பற்றியே எண்ணி, எண்ணி, நாம் சந்தோஷப்பட்டுக்கொண்டிருப்பதால் படம் எத்தனை ஓட்டையாய் இருந்தாலும் நாம் ரஸிக்கிறோம்.

ஆனால் க்யூ வரிசையில் நின்று, கஷ்டம் இல்லாமல் டிக்கட் வாங்குவதில் இத்தனை ஆனந்தம் இருக்கிறதா? கிடையாது.

இல்லை, நீங்கள் படம் பார்க்கிறவர்கள் இல்லை, படத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் படத்திற்குப் பொதுஜன ஆதரவு நிறைய இருக்கிறது என்பது எப்படித்தெரியும்?

ஜனங்கள் ஒருவர் பின் ஒருவராக, சண்டை சச்சரவின்றி, இரைச்சல், கூச்சல் ஒன்றுமின்றி, கொட்டகைக்குள் நுழைந்தால் கூட்டம் நிறைய வருகிறது என்று தெரியுமா? இல்லை, ஒருவரை யொருவர் நெருக்கி யடித்துக் கொண்டிருந்தால் கூட்டம் நிறைய வருகிறது என்று தெரியுமா? சந்தேகமின்றி, நெருக்கி யடித்துக் கொண்டிருந்தால்தான் தெரியும். இல்லாவிடில் சில தமிழ்ப்பட முதலாளிகள் வேண்டுமென்றே ஜனங்கள் கொட்டகைக்கு வெளியில் ஒருவரை யொருவர் அடித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி அதைப் படம் பிடித்து வெளியிடுவார்களா?

தங்கள் படத்துக்கு டிக்கட் வாங்குவதற்காக ஜனங்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்கிறார்கள் என்று காண்பிப்பதற்காக எத்தனை தமிழ்ப் பட முதலாளிகள் வேண்டுமென்றே கடைசி நிமிஷம் வரை டிக்கட் கொடுக்காமல் ஜனங்களைக் காக்க வைக்கிறார்கள்! எத்தனை தமிழ்ப் பட முதலாளிகள் தங்கள் காரியாலயச் சிப்பந்திகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சொல்லி நெருக்கடி ஏற்படுத்துகிறார்கள்!

ஆனால் க்யூ வரிசையில் ஜனங்களை நிறுத்தி வைத்து டிக்கட் வாங்கச் சொன்னால் இத்தனை கூட்டம் காண்பிக்க முடியுமா?

மேற் கூறிய காரணங்களுக்காக இல்லா விட்டாலும் இப்பொழுது நான் சொல்லப் போகும் ஒரு காரணத்திற்காகவேனும் இந்த க்யூ வரிசை வழக்கம் நம் நாட்டில் பரவக் கூடாது என்று நான் கூறுவேன்.

"தடியெடுத்தவன் தண்டல்காரன்" என்னும் அழகிய தமிழ்ப் பழமொழியை அழியாமல் காத்து வருகிறவர்கள் யாராவது உண்டென்றால் அது தமிழ்ப்பட முதலாளிகள்தான். அவர்கள் தமிழ்ப் பழமொழிக்குச் செய்துவரும் இப் பெருந் தொண்டு அழியாமல் இருக்க வேண்டுமானால் க்யூ வரிசை வழக்கம் பரவாமல் இருக்க வேண்டும். வேறு எங்கு பரவினாலும் சினிமாக் கொட்டகைகளுக்குப் பரவக்கூடாது. சந்தேகமில்லை!

ஆகவே என்ன சொல்கிறீர்கள்? இந்தப் பாழாய்ப்போன க்யூ வரிசை வழக்கம் பரவாமல் இருக்கவேண்டும் என்று நீங்களும் என்னுடன் சேர்ந்து பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்க விரும்புகிறீர்கள் அல்லவா? …சரி, அதற்காக, எதற்காக அப்படி எல்லாரும் மோதி அடித்துக் கொண்டு பிள்ளையார் கோவில் முற்றுகை போடுகிறீர்கள்? க்யூ வரிசையில் நின்று, ஒவ்வொருவராகத் தேங்காய் உடையுங்களேன்!

னத்துக்கு ஜனங்கள் க்யூ வரிசையில் நின்றுகொண்டிருந்தார்கள். எல்லாரும் இவனைப் போல் ஹிட்லரைக் கொல்லுவதற்காக அங்கு வந்தவர்கள்!

அப்பொழுது அந்த ஜெர்மானியனுக்கு க்யூ வரிசையின் மீது எத்தனை ஆத்திரமாக இருந்திருக்கும்! அதே ஆத்திரம்தான் எனக்கும் 'க்யூ வரிசை'யின் மீது.

அது என்னமோ தெரியவில்லை, இந்த 'க்யூ வரிசை'யைக் கண்டால் எனக்குப் பிடிப்பதே இல்லை. இது மிகவும் நல்ல வழக்கம் என்றும், எல்லாரும் இம்மாதிரி நிற்கப் பழகிக்கொள்ள வேண்டும் என்றும், எல்லாரும் இம்மாதிரி நிற்கப் பழகிக்கொள்ளாததனால் தான் நமக்கு இன்னும் சுயராஜ்யம் கிடைக்கவில்லையென்றும் சொல்லுகிறவர்கள் அநேகரை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் எனக்கு என்னமோ இந்த க்யூ வரிசையில் நிற்பதனால் நன்மைகளைவிடத் தீமைகள்தான் அதிகம் இருப்பதாகத் தோன்றுகிறது.

உதாரணமாக இந்தச் சினிமாக் கொட்டகைகளை எடுத்துக் கொள்ளுங்கள்! வர வர அநேக சினிமாக் கொட்டகைகளில், அதிலும் முக்கியமாக ஆங்கில சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் வாங்குவதற்காக க்யூ வரிசையில் நிற்கும் வழக்கம் பரவி வருகிறது.

இந்தச் சினிமாக் கொட்டகைகளுக்கு முன்னால், டிக்கட் வாங்குவதற்காக க்யூ வரிசையில் நிற்கும்போதெல்லாம் நான் கடவுளை வேண்டிக்கொண்டேயிருப்பேன்.

"பகவானே! இந்தியாவுக்கு வேறு என்ன கஷ்டம் வந்தாலும் வரட்டும்! தேசத்தில் உள்ள பஞ்சம் நீங்கி, செழிப்பு ஏற்பட்டு, எல்லாரும் அஜீரணத்தினால் சாகும் துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படட்டும்! ஆனால் நம் தமிழ் சினிமாக் கொட்டகைகளுக்கு முன்னாலும் இம்மாதிரி க்யூ வரிசையில் நிற்கும் கஷ்டம் ஏற்பட வேண்டாம்" என்று வேண்டிக் கொள்வேன். அதற்குக் காரணம் கூறுகிறேன், கேளுங்கள்.

தற்காலத்தில் தமிழ் சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் வாங்குவதே ஒரு தனிக்கலை என்று கூறவேண்டும். ஒருவன் வாழ்க்கையில் வெற்றி யடைவானா, மாட்டானா என்பதை அவனால் ஒரு தமிழ் சினிமாவின் முதல் நாள் ஆட்டத்திற்கு டிக்கட் வாங்க முடிகிறதா, இல்லையா என்பதிலிருந்து கண்டுபிடித்து விடலாம்.



டாக்டர் :—கவலைப் படாதீர்கள்! முதல் இஞ்செக்ஷன் கொஞ்சம் வலிக்கும். இரண்டாவது இஞ்செக்ஷன் வலிக்கவே வலிக்காது.

நோயாளி :— அப்படியானால் இரண்டாவது இஞ்செக்ஷனைத்தான் இப்பொழுது கொடுங்களேன்!

ஏனெனில் நான் இப்பொழுது குறிப்பிடப்போகும் சில யோக்கியதாம்சங்கள் இருந்தால்தான் தமிழ் சினிமாகொட்டகையில் டிக்கட்டு வாங்க முடியும்.

முதலாவதாக, நல்ல தேக திடகாத்திரம் இருக்கவேண்டும். நூறு பேருக்குப் பின்னால் வந்தாலும் அவர்களை முண்டியடித்துத் தள்ளிவிட்டு, முன்னால் போய் டிக்கட்டு வாங்குவதற்குத் தேக திடகாத்திரமின்றி முடியாது. ஆகவே எவ்வளவுக் கெவ்வளவு நாம் சினிமா அதிகமாகப் பார்க்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம் தேகம் திடம் பெறும் என்றே சொல்லலாம்.

க்யூவரிசையில் நின்றால் நம் தேகம் திடம் பெறுமா, நீங்களே சொல்லுங்கள்! மேல் நாடுகளில் க்யூவரிசையில் நிற்கிறார்களே யென்றால் அவர்கள் தேகம் திடமாவதற்கு எத்தனையோ வழிகள் வைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட எல்லாருமே தேகாப்பியாசம் செய்கிறார்கள். கால் பந்து, கிரிக்கட், போன்ற அநேக விளையாட்டுகள் விளையாடுகிறார்கள்.

ஆனால் அம்மாதிரி நாம் எங்கே விளையாடுகிறோம்? தேகாப்பியாசமாவது செய்கிறோமா? அதுவும் கிடையாது. அப்படியிருக்கத் தமிழ் சினிமாக் கொட்டகைகளுக்கு முன்னாலாவது நாம் ஒருவருக்கொருவர் முண்டியடித்துக் கொண்டு தேகாரோக்யம் பெறுவதை எதற்காகச் சில நாகரிக புருஷர்கள் தடுக்கிறார்கள் என்று கேட்கிறேன்!

நமக்குள் ஐக்ய பாவம் வளர்வதற்கு இம்மாதிரி முண்டியடித்து, நெருக்கியடித்து டிக்கட் வாங்குவதைவிடச் சிறந்த வழி கிடையாது என்பது என் அபிப்பிராயம்.

அப்படி டிக்கட் வாங்கும்போது நாம் ஹிந்துவென்றோ, முஸ்லிம் என்றோ வித்தியாசம் பார்க்கிறோமா? பிராமணர் என்றோ, பிராமணரல்லாதார் என்றோ நினைத்துப் பார்க்கிறோமா? ஏழையென்றோ, பணக்காரன் என்றோ என்



கடியபத்துவன்! தண்டல்காரன்

நாடோடி

★

"க்யூ வரிசை" என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா?... இல்லையா? ... ரயில்வே ஸ்டேஷன்களிலும், தபால் காரியாலயங்களிலும் ஒருவித விளம்பரங்கள் ஒட்டியிருக்கிறார்களே, பார்த்திருக்கிறீர்களா?

ஒரு பக்கத்தில் டிக்கட் வாங்குவதற்கோ, அல்லது தபால் தலை வாங்குவதற்கோ ஜனங்கள் ஒருவரையொருவர் நெருக்கியடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தலைக்கு மேலே, "இது சரியான வழி அல்ல" என்று போட்டிருக்கும். இன்னொரு பக்கத்தில் ஜனங்கள் ஏதோ 'டிரில்' வகுப்பில் அணிவகுத்து நிற்பது போல் நின்று கொண்டிருப்பார்கள். அவர்கள் தலைக்கு மேலே, 'சரியான வழி' என்று போட்டிருக்கும்,

இந்தச் "சரியான வழி"க்குத்தான், அதாவது ஒருவரையொருவர் நெருக்கியடிக்காமல் வரிசையாக நிற்கும் வழிக்குத்தான் ஆங்கிலத்தில் 'க்யூ வரிசை' என்று பெயர்.

'க்யூ வரிசை' என்றால் என்ன என்பதை நீங்கள் தெரிந்து கொண்டு விட்டபடியால் மேலே இதைப்பற்றி ஒரு சிறு கதை சொல்லலாம் என்று பார்க்கிறேன்.

ஜெர்மனியில் சாமான், பண்டங்கள் கிடைப்பதற்கு மிகவும் திண்டாட்டமாய் இருக்கிறபடியால், எந்த சாமான் வாங்குவதற்கும் ஜனங்கள் க்யூ வரிசையில் வெகு நேரம் நின்றுகொண்டிருப்பார்களாம். ஒரு ஜெர்மானியனுக்கு ஒரு ஜோடி துணி வாங்கவேண்டியிருந்தது. இதற்காக அவன் ஒவ்வொரு துணிக் கடையிலும் ஒன்பது மணி நேரம் க்யூ வரிசையில் நின்று, நின்று அலுத்துப் போய்விட்டான். க்யூ வரிசையில் நின்று, நின்று கால் ஒடிந்தது மிச்சமே யொழியத் துணி கிடைக்கும் வழியாயில்லை.

ஒரு நாள் அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. இத்தனை கஷ்டத்துக்கும் அந்த ஹிட்லர் அல்லவா காரணம் என்று நினைத்தான். உடனே போய் அந்த ஹிட்லரைக் கொன்று தீர்த்து விட்டுத்தான் மறு காரியம் என்று ஹிட்லர் மாளிகையை நோக்கி ஓடினான். மாளிகையை அடைந்தான். ஆனால் என்ன ஏமாற்றம்! அங்கும் ஒரு மைல்





காலக்ஷேபம்

பழைய பாக்கி

பழைய வக்கீல்:—சந்தோஷம்! தாங்கள் முதன் முதல் கோர்ட்டில் ஆஜரான அன்றே ஒரு வழக்கு வந்திருக்கிறது.



புதிய வக்கீல்:—ஆம், ஆம்! பி. ஏ. படித்த போது எனக்குத் தைத்துக் கொடுத்த தையற்காரன் பாக்கிக்கு வழக்குத் தொடுத்திருக்கிறான்.

—என். வைத்யநாதன்.

●

யார் பிசகு?

தன்னுடைய பையன் தினம் நிறைய மார்க் வாங்கி வந்ததைப் பார்த்துத் தகப்பனார் சந்தோஷப்பட்டார். திடீரென்று ஒரு நாள் ஜீரோ மார்க் வாங்கினான்.

தகப்பனார்:—ஏண்டா, இன்று இவ்வளவு பிசகு? ஜீரோ வாங்கி இருக்கிறாயே?

கிட்டு:—எல்லாம் வாத்தியாரின் பிசகு தான்! எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த முத்துவை இன்றைக்கு வேறிடத்திற்கு மாற்றிவிட்டார்!

—டி. நீலு.

●

ஈசன் செயல்!

நோயாளி:—எனக்கு உயிர் கொடுத்தது நீங்கள் தான்.



வைத்தியர்:—அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை; நம்மால் ஆவது என்ன இருக்கிறது? இல்லை. எல்லாம் ஈசன் செயல்!

நோயாளி:—அப்பொழுது நீங்கள் 'பில்' அனுப்ப மாட்டீர்களே!

—கே. ஆர். கே.

தெரியாது

ஒருவன்:—உன் பெயரென்னடா?

பையன்:—தெரியாது.

ஒருவன்:—சாப்பிடுவதற்கு உங்கம்மா உன்னை எப்படிக் கூப்பிடுவாள்?

பையன்:—எங்கம்மா என்னைக் கூப்பிடவே மாட்டாள். நான் அங்கே சாப்பாட்டுக்குத் தயாராக இருப்பேன்.

—எஸ். கே. பாலசுப்ரமண்யம்.

●

கொடுக்கமாட்டேன்!

மரண வரி விதிப்பதைப் பற்றி நகர சபையில் பலமான விவாதம் நடந்து கொண்டிருந்தது.

ஓர் அங்கத்தினர்:—இந்த வரி விதிப்பதைப் பொதுஜனங்கள் பலமாக எதிர்ப்பார்கள் என்பது நிச்சயம். ஏன், என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன்? நான் செத்தாலும் இந்த வரிக்கு ஒரு பைசாக்கூடக் கொடுக்க மாட்டேன்.

—என். எஸ். சீனுவாசன்.

●

அஞ்ஞானப் போர்வை!

குரு:—சிஷ்யா! இந்த மார்கழி மாதம் இருக்கிறதே, இது மகா புண்ணிய மாதம். பிராதக் காலத்தில் எழுந்திருந்து பகவானை ஸ்தோத்திரம் செய். அஞ்ஞானம் என்கிற மாயப் போர்வையை உதறி எறி!



சிஷ்யன்:—ஸ்வாமி! அஞ்ஞானத்தை உதறித் தள்ளுவதுகூட அவ்வளவு பிரமாதமாக இப்போது எனக்குத் தோன்றவில்லை. இந்தக் குளிரில் போர்வையை எப்படி உதறித் தள்ளுகிறதென்று தான் கஷ்டமாயிருக்கிறது!

—கோபாலகிருஷ்ணன்.

●

நல்ல காலம்

உபாத்தியாயர்:—டேய், கோபு! ரயில் நடக்கிறது. இது என்ன காலம்?

கோபு (சோம்பேறி):—நிகழ் காலம்.

உபாத்தியாயர்:—டேய் சோம்பேறி! நீ பரீட்சையில் தேறுவாய். இது என்ன காலம்?

கோபு:—நல்ல காலம் சார்!

—டி. பார்த்தசாரதி.



"கழுத்தில் கட்டியிருப்பதை அவிழ்த்து விடுங்கள்" என்று புறு சோர்ந்த முகத்துடன் சொல்லிற்று.

"ஏன்?" என்று கேட்டார் டாக்டர் ஆந்தையார்.

"இப்பொழுது என்னுடைய தலை ஆடினால்தான் சிரமம் இல்லாமல் நடக்க முடியும் போலிருக்கிறது!"

"இது ஏன் உனக்கு முன்னமேயே தெரியவில்லை?"


"உங்களுக்கே தெரியவில்லையே! எனக்கு எப்படித் தெரியும்?"

"என்ன! எனக்கா தெரியவில்லை?"

"ஆமாம்; தெரிந்திருந்தால் எல்லா டாக்டர்களும் சொன்னதுபோல் நீங்களும் சொல்லியிருக்க மாட்டீர்களா?"

"அசடே! அவர்களெல்லாம் உன்னைப் போன்ற அசடுகள்! எதுவாயிருந்தாலும் அதைச் செய்து பார்த்தால்தான் அதன் அருமை பெருமை தெரியும். அப்படிச் செய்யாமல் புத்திமதி சொன்ன அந்த டாக்டர்களின் பேச்சை நீ கேட்டாயா? இல்லை. இப்பொழுது நானும் அவர்களைப் போல் ஏதாவது சொல்லி உன்னை விரட்டிவிடாமல், நீ சொன்னபடி செய்ததால் தானே உன் தவறு உனக்குத் தெரிந்தது? இப்படித் தனக்குத்தானே தெரிய வேண்டுமென்றுதான் நான் அப்படிச் செய்தேன்!" என்று சொல்லிக் கொண்டே டாக்டர் ஆந்தையார் அதன் கழுத்தில் கட்டியிருந்த கட்டை அவிழ்த்து விடும்படி நர்ஸ் வாத்துக்கு உத்தரவிட்டார்.

தன் தவறை உணர்ந்த புறு தன்னை மன்னிக்கும்படி டாக்டர் ஆந்தையாரை வேண்டிக் கொண்டது. ஆந்தையார் தன்னை மன்னித்த சந்தோஷத்தில், அவர் காது செவிடுபடும்படி தன் சிறகுகளை 'படார், படார்' என்று அடித்துக் கொண்டே அந்தப் புறு பறந்து சென்றது. அதை எதிர்கொண்டு அழைக்க வந்த அதன் தோழர்கள், அந்தப் புறுவையும் கூட்டிக் கொண்டு கடலைக் கொல்லையை நோக்கிச் சென்றனர்!



டாக்டர் ஆந்தையார்!

—பகீரதன்—

அந்தத் தோப்பில் எத்தனையோ புறாக்கள் வசித்து வந்தன. எல்லாப் புறாக்களுக்கும் ஒரே ஒரு கவலைதான் இருந்தது. அந்தக் கவலை என்ன தெரியுமா? அந்தத் தோப்புக்கு அடுத்தாற்போல் இருக்கும் கடலைக் கொல்லைகளில் காவல் இருப்பவர்களைக் கண்டால் அந்தப் புறாக்களுக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. ஏனெனில் அவர்கள் ஒருவரும் இல்லாவிட்டால், தங்கள் இஷ்டப்படி கடலைக் கொல்லையைக் கொள்ளை அடிக்கலாமல்லவா?


ஆனால் அவற்றில் ஒரே ஒரு புறாவுக்கு மட்டும் அந்தக் கவலையே கிடையாது. ஆனால் அது வேறொரு கவலை கொண்டிருந்தது. அந்தக் கவலை என்ன தெரியுமா? தான் நடந்து செல்லும் போது தன் தலை ஆடுவது அதற்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதற்காக அது ரொம்ப ரொம்ப வருத்தப்பட்டது. "எந்த டாக்டரிடமாவது போய் இதற்கு ஏதாவது வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்" என்று தீர்மானித்தது.

எந்த டாக்டரும் அந்தப் புறாவின் நோய்க்குச் சிகிச்சை செய்ய முன் வரவில்லை. அதன் நோயைக் கேட்டதும் எல்லா டாக்டர்களும் சிரித்தனர். "சீ, அசடே! உங்களுக்கெல்லாம் நடக்கும் போது அப்படித் தலை ஆடுவது இயற்கையல்லவா? அதற்கு நாங்கள் என்ன வைத்தியம் செய்வது?" என்று சொல்லி விரட்டி விட்டனர்.

கடைசியில் அந்தப் புறா தோப்பிலிருந்த டாக்டர் ஆந்தையாரிடம் சென்று தன் குறையைக் கூறி முறையிட்டது. அவர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு அந்தப் புறாவை அழைத்துக் கொண்டு தம் அறைக்குள் சென்றார். அங்கே இருந்த நர்ஸ் வாத்து, டாக்டர் ஆந்தையாரின் உத்தரவுப்படி அந்தப் புறாவின் கழுத்துக்கு இரண்டு பக்கமும் இரண்டு மரச் சட்டங்களை வைத்துக் கழுத்தை உறுத்தாமல் கொஞ்சம் பஞ்சையும் வைத்து மெதுவாகக் கட்டிற்று. அதற்குப் பிறகு டாக்டர் ஆந்தையார் புறாவை நடந்து பார்க்கச் சொன்னார்.

புறா வெகு லாகவமாக நடந்து பார்த்தது. கழுத்து கொஞ்சங்கூட ஆடவே இல்லை. தன்னுடைய சந்தோஷத்தில் அது டாக்டருக்கு ஒரு வந்தனம் சொல்லிவிட்டு 'விர்'ரென்று பறந்துசென்றது. டாக்டர் ஆந்தையார் ஆந்தை விழி விழித்துக் கொண்டு அந்தப் புறா போன வழியையே பார்த்துக் கொண்டிருந்தார். புறாவின் அறியாமையை எண்ணிச் சிரித்தார். அவருடன் நர்ஸ் வாத்தும் சேர்ந்து சிரித்தது. ஏன் தெரியுமா? தலை ஆடினால் தான் புறாக்களினால் சிரமம் இல்லாமல் நடக்க முடியும்.

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் அந்தப் புறா, டாக்டர் ஆந்தையாரைத் தேடி வந்தது. விஷயம் தெரிந்த டாக்டர் தமக்கு ஒன்றுந் தெரியாதவர் போல் "என்ன?" என்று கேட்டார்.



தாயார்:—ஏன் அழுகிறாய்?
குழந்தை:—ஒரு வண்டு கொட்டி விட்டதம்மா?
தாயார்:—ஐயோ உன்னையா?
குழந்தை:—என்னை இல்லை அம்மா! என் பலூனை அம்மா!

சாதாரண ஒரே வார்த்தை . . . நர்ஸ்



தூய வெண்ணுடையுடன் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் ஓர் சுத்தமான உருவம் என்ற சாதாரண அபிப்பிராயம்தான் உங்களுக்கு. ஆனால் நோயாளிக்கோ அல்லது காயமடைந்த ஓர் வீரனுக்கோ அப்படியில்லை! மெத்தென்று தலையணையை வைக்கவோ, காயங்களுக்குக் கட்டுக் கட்டவோ செய்யும் அந்த மிருதுவான கரங்கள்! வலி அதிகமாக உள்ளபோதோ அல்லது இரவு முழுதும் நோயாளியின் அருகேயே இருந்து கண் விழித்து வேண்டியவைகளைச் செய்யவோ, சிரித்த முகத்துடனும் அன்புடனும் அவள் எப்போதும் தயாராக இருப்பவள். யுத்த அரங்கத்திலிருந்து திரும்பிவரும் நமது வீரர்களுக்குச் சிகிச்சை செய்து உதவி அளிக்க அநேக நர்ஸ்கள் தேவை. அவர்களது சேவை மிகவும் இன்றியமையாதது. ஆதலால் இந்தியப் பெண்மணிகள் இந்த அவசரமான தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும். இன்றே வந்து சேருங்கள். முன் அனுபவம் அவசியமில்லை. வேலையில் சேருமுன் சிறு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏற்கனவே நர்ஸ் வேலையில் தேர்ந்தவர்கள் நேரடியாக சேர்ந்து விடலாம். அனுபவமுள்ளவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்படும். திருப்திகரமான சேவையின் முடிவில் சன்மானம் வழங்கப்படும். யோக்யதா பத்திரம் பெற்ற நர்ஸ்கள் ஐ. எம். என். எஸ். நிபந்தனைகளுக்குச் சம்மதமில்லாவிடில் விசேஷ நிபந்தனைப்படி ஏ. என். எஸ்.-ல் சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் டிவிஷனிலுள்ள லேடி சூப்பரின்டெண்டெண்ட், ஸெயின்ட் ஜான் அம்புலன்ஸ் ப்ரிகேட், ஓவர்ஸீஸ்க்கு எழுதவும். இந்த விலாஸத்தை அறிந்துகொள்ள முடியாமல் போனால் டைரக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் சர்விஸ், நியூடெல்லி என்ற விலாஸத்திற்கு எழுதுங்கள்.

ஏ. என். எஸ்.

(ஆக்ஸிலரி நர்ஸிங் சர்விஸ்)

இதில் சேர்ந்து இந்தியாவுக்குச் சேவை செய்யுங்கள்.

AAA 999

வீ ர ல க்ஷ் மி

சுத்தானந்த பாரதி

உலகச் சரித்திரத்தில் பத்துப் பதினைந்து **வீரப் பெண்கள்** விளங்குகிறார்கள். அவர்களுடன் நமது தமிழ் நாட்டில் விளங்கிய வீரர்களையும் சேர்க்க வேண்டும்.

அஞ்சலி வீரப்பெருமாள் மகள்; பாஞ்சாலங்குறிச்சி இரத்தத்தில் எழுந்த வீரத் திருமகள். தந்தை பல போர்களில் வாள் பிடித்துப் பகைவரைப் புறங்கண்டவன். அஞ்சலி அவனுக்கு ஒரே பெண். அவள் கேட்டதெல்லாம் அவன் தந்தான். அஞ்சலிக்கு ஐந்து வயது. தந்தை மகளைத் தன் பொருட்சாலைக்கு அழைத்துச் சென்று, "மகளே! உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்" என்றான். அஞ்சலி பொன்னைத் தொடவில்லை; பட்டணிகளைப் பார்க்கவில்லை. அங்கே ஓர் அழகான வாள் இருந்தது. அஞ்சலி பாய்ந்து வலக் கையில் வாளைப் பிடித்தாள். "அப்பா! இந்த வாள் எனக்குத்தான்" என்றாள்.

பெண் பருவமடைந்தாள். கலியாணம் பண்ண மாப்பிள்ளை பார்த்தார் தந்தை. "அப்பா, எனக்குச் சரியாக வாள் வீசும் வீரனையே நான் தேர்ந்தெடுப்பேன்" என்றாள் பெண். பல வீர வாலிபர்கள் அவள் முன் வாள் வரிசையைக் காட்டினர். ஒரு நாள் பாஞ்சாலங் குறிச்சி **பொம்மு நாயக்கன்** வேட்டையாடிக் களைத்து வந்தான். அவனைக் கண்டதும் அஞ்சலி காதல் கொண்டாள். அவள் அவன் சபதத்தைக் கேட்டுத் தன் வாள் வீச்சைக் காட்டினாள். தனக்கு நிகரான வீரன் இவனே என்று அஞ்சலி அவனுக்கு மாலை சூட்டினாள். தம்பதிகள் வீரவாழ்வைத் தொடங்கி ஒரு மகனையும் பெற்றனர்—பெயர் ஜகவீரன்.

ஐதராலி ஒரு நாள் பாஞ்சாலங்குறிச்சியை வளைத்துக் குண்டு போட்டான். அஞ்சலியும் கணவனுடன் படை நடத்தி அவனை விரட்டியடித்தாள். இதற்குப் பிறகு வந்தான் திப்புசுல்தான். அவன் திண்டுக்கல்லில் முகாம் போட்டுக் கொண்டு, சுற்றியுள்ள சீமைகளைப் படையெடுத்துப் பயங்கர லீலை நடத்தினான். எப்படியாவது பாஞ்சாலங் குறிச்சியைப் பிடித்துவிட வேண்டுமென்பதே அவன் உறுதி. அதற்காக அவன் **ராஜாகான்** என்பவனைத் தேர்ந்தெடுத்து வலிய குதிரைப் படையுடன் அனுப்பினான்.

ராஜாகான் நெஞ்சில் ஒரு கொடிய சூழ்ச்சியுடனே தான் பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்தான். கோட்டையைப் பிடித்து அஞ்சலியைத் தூக்கிச் செல்வதே அவன் எண்ணம். பகைவர் சேனை கோட்டைக் கருகே வந்து விட்டது. பொம்மு படுத் துறங்குகிறான். "நாயக்கர் எழுந்ததும் போர்க்களம் வரச் சொல்" என்று சேவகனுக்கு ஆணையிட்டு அஞ்சலி வாளை எடுத்தாள். குதிரைமேல் ஏறினாள். வீரரைத் தன் பின் அழைத்துக் கொண்டு நேராக ராஜாகான் முகாமிற்கே சென்று போர் முரசம் முழங்கினாள். முரசு கேட்ட ராஜாகான் வேங்கை போலப் பாய்ந்து குதிரை யேறி வந்தான். "முதலில் எனக்குப் பதில் சொல்லிப் பிறகு என் படைக்குப் பதில் சொல்" என்றாள் அஞ்சலி.

ஒரு மைல் சுற்றளவில் இருவரும் குதிரை மீதிருந்தபடியே பாய்ந்து பாய்ந்து போர் புரிந்தனர். முடிவில் அஞ்சலியின் வாள் ராஜாகான் காலை முறித்து விட்டது. அவன் மயங்கி விழுந்தான். குதிரை திகைத்தது. அஞ்சலி தன் குதிரையைக் கோட்டைக் கனுப்பிவிட்டு, ராஜாகான் குதிரைமேல் ஏறி வெற்றி முரசுடனே கோட்டைக்கு வந்தாள். அஞ்சலி திரும்பியபோதே கணவன் போரங்கி யணிந்து வாள் கொண்டெழுந்தான். "நாதா! பகைவர் தோற்றோடினார்கள். இந்த வாள் வென்றது. இதோ ராஜாகான் குதிரை" என்றாள் அஞ்சலி. கணவன் தன் வீர மார்பில் அவளைத் தழுவிக் கொண்டு "அஞ்சலி! நீயே என் வீரலக்ஷ்மி" என்றான்.

உறங்கும் கணவனும் உற்றெழு முன்பே
புறங்கண்டாள் அஞ்சலிவெம் போர்ப்பகையை
—அறந்தாங்கும்
கண்ணுக் கழகும் கலையழகும் போலவே
பெண்ணுக்கு வீரம் பெரிது.

"சும்மா இருங்கள், அப்பா! உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. குமார சக்கரவர்த்தியை இலேசுப்பட்டவர் என்று நினைக்கிறீர்கள். முத்து மாலையையும், ரத்தின ஹாரத்தையும், புஷ்பக் கூடைகளையும், பட்டுச் சேலைகளையும் அனுப்பி நம்மை ஏமாற்றி விடப் பார்ப்பார். யாரை நம்பினாலும் மாமல்லரை நம்பக் கூடாது. ஏவலாளர்களே! ஏன் நிற்கிறீர்கள்? எடுங்கள் இவற்றை எல்லாம் உடனே! நடையைக் கட்டுங்கள், எடுக்கிறீர்களா, இல்லையா?"

"இதோ எடுத்துக்கொண்டு போகிறோம், அம்மா! இதோ எடுத்துக் கொண்டு போகிறோம்."

இவ்வாறு பயந்து நடுங்கிக்கொண்டு கூறிய ஏவலர்கள், வரிசைப் பொருள்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வருவார்களென்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், யாரும் வெளியே வருகிற வழியைக் காணோம்!

நல்ல மர்மம் இது! வீட்டுக்குள் பேச்சுக் குரல் மட்டும் கேட்கிறதே தவிர, வேறு நடமாடும் சந்தடியையே காணோமே? வியப்பாகவல்லவா இருக்கிறது! உள்ளே போய்ப் பார்த்து விடலாம்.

உள்ளே போனால், நமது வியப்பு ஒன்றுக்குப் பதின் மடங்காகிறது. ஏனெனில், உள்ளே சக்கரவர்த்திக்காக ஆயனர் அமைத்திருந்த சிற்ப சிம்மாசனத்திலே சிவகாமி மட்டுந்தான் தன்னந் தனியாக உட்கார்ந்திருக்கிறாள்! இத்தனை நேரமும் அவள் சம்பாஷணை நடத்தியதெல்லாம் யாருடன்?

இதோ மர்மம் வெளியாகிறது. சிவகாமி பேசுகிறாள், தனக்குத் தானே பேசிக் கொள்கிறாள்.

"ஏவலர்களே! இங்கே வாருங்கள்!" என்கிறாள்.

ஒருவரும் வரவில்லை. ஆனாலும் எதிரில் யாரோ இருப்பதாக எண்ணிக் கொண்டு பேசுகிறாள்.

"உங்கள் பல்லவ குமாரரிடம் இதையும் சொல்லுங்கள், 'மாமல்லர் என்றைக்கு மனம் கனிந்து சிற்பி மகள் சிவகாமியைப் பார்ப்பதற்கு வருகிறாரோ, அன்றைக்குத் தான் அவளுக்குப் பிறந்த தினம்' என்று சொல்லுங்கள். தெரிகிறதா? நான் சொன்னதை முடிபோட்டுக் கொண்டு போய் மறந்துவிடாமல் சொல்லுங்கள்."

இவ்விதம் சொல்லிவிட்டுச் சிவகாமி சற்றுச் சும்மா இருந்தாள். பிறகு மறுபடியும் பேசினாள். ஆனால், இந்தத் தடவை குரல் மாறுபட்டிருந்தது. இப்போது நாம் கேட்பது ஆண்பிள்ளைக் குரல்; ஏற்கெனவே கேட்ட ஏவலாளனின் குரல்தான்.

"அம்மணி! ஒன்று சொல்ல மறந்து விட்டோம். மன்னிக்க வேண்டும். தங்களுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த வரிசைப் பொருள்களை அனுப்பிய பல்லவ குமாரர், சற்று நேரத்துக்கெல்லாம் தாமே தங்க ரதத்தில் வருவதாகவும் தெரியப்படுத்தச் சொன்னார்."

மறுபடியும், சிவகாமியின் மகிழ்ச்சி ததும்பிய உண்மைக் குரல்: "ஆஹா! மாமல்லரே வருவதாகச் சொன்னாரா! அப்படியானால் இன்றைக்கு என் பிறந்த நாள்தான்!...... அப்பா! இன்றைக்கு உங்கள் மகளின் பிறந்த நாள். என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? இன்றைக்கு ஒரு நாளாவது பச்சிலை அரைப்பதை நிறுத்துங்கள்......அதோ! ரதம் வரும் சத்தம் கேட்கிறதே!"

சிவகாமி, கல் சிம்மாசனத்திலிருந்து துள்ளி எழுந்தாள். அப்போது உண்மையாகவே வீட்டுக்கு வெளியில் ரதம் வரும் சத்தம் கேட்டது. சற்றே காது கொடுத்துக் கேட்டாள். முகத்தில் சொல்ல முடியாத ஆவல் ததும்பப் பரபரப்புடன் வாசற்புறம் ஓடி வந்து பார்த்தாள்.

வீட்டை நெருங்கி ரதம் வந்து கொண்டிருந்தது. அது குமார சக்கரவர்த்தியின் ரதம்தான். ரதசாரதியும் கண்ணபிரான்தான். ஆனால், ரதத்தில் இருப்பது யார்? வேறு யாரோபோல் இருக்கிறதே!

ஆஹா! என்ன ஏமாற்றம்? வருகிறவர் யாராயிருந்தாலும், நிச்சயமாக மாமல்லர் அல்ல! — சிவகாமி, அந்தச் சிற்ப வீட்டின் வாசல் தூணைப் பிடித்துக் கொண்டு கற்சிலையைப் போல் நின்றாள்.

"போதும், போதும்! இந்த முத்து மாலைகள் யாருக்கு வேண்டும்? உங்கள் குமார சக்கரவர்த்தியிடம் நான் சொன்னதாகச் சொல்லு: ஆயனச் சிற்பியின் வீட்டுக்கு அருகே தாமரைக் குளக்கரையில் புன்னைமரம் ஒன்று புஷ்பித்திருக்கிறது. காலை நேரத்தில் அம் மரத்தடிக்குச் சென்றால் தரையிலே ஆயிரமாயிரம் முத்துக்கள் சொரிந்து கிடக்கும். அந்தப் புன்னை மலர் முத்துக்களின் அழகுக்கு உறைபோடக் காணாது இந்தக் கொற்கை முத்து என்று சொல்லு. வேண்டுமானால், ஒருநாள் காலையில் வந்து பார்த்துவிட்டுப் போகச் சொல்லு. இருக்கட்டும்! அதோ அந்தத் தங்கப் பேழையிலே என்ன இருக்கிறது?" என்று சிவகாமி கேட்டாள்.

"அம்மணி! அலைகடலின் ஆழத்திலே சௌந்தரிய தேவதை ஒளித்து வைத்திருந்த பவளங்கள், — சமுத்திர ராஜனின் கடுங்காவலை மீறி அபகரித்துக் கொண்டு வந்த அழகிய பவளங்கள், — உலகத்திலே உள்ள மன்னாதி மன்னர்களெல்லாம் தங்கள் மணிமகுடத்தில் புனைவதற்கு ஆசைப்படக் கூடிய ஒப்பற்ற பவளங்கள் — இந்தத் தங்கப் பேழையில் இருக்கின்றன. பாரத நாடெங்கும் புகழ் பெற்ற பரத சாஸ்திர ராணியின் மேனியை அலங்கரிப்பதற்கு உகந்தவை என்று இந்தப் பவள மாலைகளைப் பல்லவ குமாரர் அனுப்பியிருக்கிறார்......"

"அழகுதான்! இந்தப் பவள மாலைகள் உங்கள் பல்லவ குமாரருக்கு அதிசயமாய்த் தோன்றலாம். ஆனால் அவரிடம் நீ போய்ச் சொல்லு: 'ஆயனச் சிற்பி வீட்டின் இரண்டாம் கட்டிலே பரத கலா ராணி சிவகாமி வளர்க்கும் கிளிகள் இருக்கின்றன. அந்தக் கிளிகளின் வாயில் உள்ள செம்பவளத்துக்கு எப்பேர்ப்பட்ட கடல் பவளமும் இணையாகாது' என்று நான் கூறியதாகக் குமார சக்கரவர்த்தியிடம் தெரியப்படுத்து. வேண்டுமானால் நேரிலே வந்து பார்த்து விட்டுப் போகும்படி சொல்லு. இருக்கட்டும்; அதோ அந்தக் கூடைகளிலே என்ன?"

"அரண்மனை உத்யானவனத்திலே மலர்ந்த செண்பகப் பூக்கள், குண்டு மல்லிகைகள், பிச்சி மலர்கள்......"

"வேண்டாம், வேண்டாம்! உடனே எல்லாவற்றையும் வெளியே கொண்டு போங்கள். உங்கள் பல்லவ குமாரரிடம், 'சிவகாமிக்கு ஒரு காலத்தில் பூ என்றால் பிராணனாயிருந்ததுண்டு; ஆனால், ஏதோ ஒரு காரணத்தினால் இப்போது பூவைக் கண்டால் பிடிப்பதேயில்லையாம்' என்று தெரியப்படுத்துங்கள்......ஆமாம்; இதையெல்லாம் எதற்காகப் பல்லவ குமாரர் அனுப்பினாராம், தெரியுமா?"

"இன்றைக்குத் தங்களுடைய பிறந்த தினம் என்பதற்காக அனுப்பியுள்ளார், அம்மணி!"

"அப்படியா? மிகவும் சந்தோஷம். இந்த ஏழைச் சிற்பி மகளின் பிறந்த தினத்தைக் குமார சக்கரவர்த்தி நினைவு வைத்துக் கொண்டிருப்பது பற்றி நிரம்ப சந்தோஷம். ஆனால், அவருடைய ஞாபக சக்தியில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும். நீங்கள் இந்தப் பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டுபோய் 'இன்று சிவகாமியின் பிறந்த நாள் இல்லை' என்று சொல்லிவிடுங்கள்..."

"மன்னிக்க வேண்டும், அம்மணி! தங்கள் பிறந்த நாள் இன்றைக்கு இல்லையென்றால், பின் என்றைக்கு? ஒரு வேளை மாமல்லர் கேட்டால் நாங்கள் சொல்ல வேண்டுமே!"

"அதெல்லாம் அவர் கேட்க மாட்டார். அப்படி அவர் கேட்டால், 'சிவகாமி என்கிற பெண் பூமியில் பிறக்கவே இல்லை' என்று சொல்லி விடுங்கள்!"

இதென்ன விந்தை? சற்று முன்னால், ஆயனச் சிற்பியை வீட்டுக்கு வெளியே மரத்தடியில் பார்த்தோமல்லவா? இப்போது வீட்டுக்குள்ளேயிருந்து அவருடைய கனிந்த குரலைக் கேட்கிறோம்:—

"குழந்தாய்! சிவகாமி! உனக்கு என்ன வந்துவிட்டது? ஏன் இப்படி இவர்களை விரட்டியடிக்கிறாய்? குமார சக்கரவர்த்தியே உன்னுடைய பிறந்த தினத்தை ஞாபகம் வைத்துக் கொண்டிருந்து வரிசைகள் அனுப்பியிருக்கும்போது......"

எத்தனை ஆனந்தம்! எத்தனை ஏமாற்றம்! எத்தனை இன்ப வேதனை? எத்தனை அன்புக் கலகம்! கூடிக் குலாவும் நேரம் எவ்வளவு! சொல்லம்புகளினால் ஒருவரை யொருவர் துன்புறுத்தல் எவ்வளவு? — அந்த எட்டு மாதத்து மனோராஜ்ய வாழ்விலே எத்தனையோ யுக யுகாந்திரங்களில் அநுபவிக்க வேண்டிய சோகச் சாயை படர்ந்த ஆனந்தங்களையும், இன்ப ரேகை கலந்த வேதனைகளையும் சிவகாமி அநுபவித்து விட்டாள் என்றே சொல்ல வேண்டும்.

இருக்கட்டும்; இப்போது சிவகாமியைப் போய்ப் பார்க்கலாம். அவள் எங்கே இருப்பாள்? அநேகமாக வீட்டுக்குள்ளே தன்னந் தனியாக இருக்கலாம். போய் நேரிலேயே பார்த்து அவளுடைய நிலையைத் தெரிந்து கொள்வோம்.

வீட்டை அணுகும்போது, உள்ளே பேச்சுக் குரலைக் கேட்டுச் சற்றுத் திகைத்து நிற்கிறோம். சிவகாமி ஏகாந்தமா யிருப்பாள், அவளுடன் மனம் விட்டுப் பேசி அவளது மனோ நிலைமையை அறியலாம் என்றல்லவா நினைத்தோம்? அவளுடன் பேசிக் கொண்டிருப்பது யாரா யிருக்கும்? ஒரு வேளை அவளுடைய செவிட்டு அத்தையா யிருக்குமோ? — இல்லை; ஆடவரின் குரல். — அதிலும் இரண்டு மூன்று குரல்கள் அல்லவா கேட்கின்றன?

உள்ளே நுழைவதற்கு முன்னால் வாசற்படிக்கு அருகில் நின்று சற்று ஒட்டுக் கேட்டு விட்டு உள்ளே போகக் கூடிய சந்தர்ப்பமா என்று தெரிந்து கொள்வோம்.

"அம்மணி! எங்களிடம் கோபித்துக்கொண்டு என்ன பயன்? பல்லவ குமாரரின் கட்டளையைத் தானே நாங்கள் நிறைவேற்றுகிறோம்?" என்று ஒரு ஆண் குரல் சொல்லிற்று.

"பல்லவ குமாரரும் ஆயிற்று. கட்டளையும் ஆயிற்று! மாமல்லருக்கு இன்றைக்கு வேறு வேலை இல்லைபோலிருக்கிறது! திடீரென்று சிற்பியின் மகளை நினைத்துக்கொண்டாராக்கும். இருக்கட்டும்; அந்தத் தந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது? திறந்து காட்டுங்கள்!" என்று கோபங் கொண்ட கோமகளின் அதிகாரக் குரலில் சிவகாமி ஆக்ஞாபித்தாள்.

"தென் பாண்டி நாட்டிலே கொற்கைத் துறைமுகத்தில் குளித்து எடுத்த அற்புதமான முத்து மாலைகள் இந்தத் தந்தப் பெட்டியில் இருக்கின்றன. அம்மணி! இதோ பாருங்கள்! கன்யா குப்ஜத்து ஹர்ஷ வர்த்தன சக்கரவர்த்தியின் பட்ட மகிஷி கழுத்திலேகூட இம்மாதிரி முத்து மாலை கிடையாது! எப்படி ஜொலிக்கிறது. பார்த்தீர்களா?" என்று ஏவலாளன் கூறினான்.



சௌகரியமாகவே இருந்தது. ஏனெனில், அவனுடைய வாழ்க்கையாகிய வானத்திலே ஜகஜ் ஜோதியாக உதயமாகி அவனுடைய இதயத் தாமரையை மலரச் செய்திருந்த பிரேம சூரியனைப் பாடிப் பரவி வாழ்த்தி வணங்குவதற்கே அவனுக்குக் காலம் போதாமலிருந்தது. உலகத்தில் இதுகாறும் யாரும் கண்டும் கேட்டு மறியாத அதிசயமான காதல் செல்வம் தனக்குக் கிட்டியிருப்பதாக எண்ணிய சிவகாமி, அந்த அதிசயக் காதலையும் காதலனையும் பற்றிச் சிந்திப்பதிலும், மனோராஜ்யம் செய்வதிலும், வருங்காலத்தைப் பற்றிய ஆகாசக் கோட்டைகள் கட்டுவதிலும் எல்லையற்ற இன்பத்தை அடைந்து வந்தாள். அந்த மனோராஜ்ய வாழ்க்கையிலே தான்



வின. குமார சக்கரவர்த்தியின் ரத சாரதி கண்ணபிரான் மூலம் அவை யெல்லாம் உண்மைதான் என்றும் தெரிந்து கொண்டார்.

அதற்குப் பிறகு நாகநந்தியடிகளும் வராமற் போகவே, ஆயனருக்கு என்று மழியாத வர்ண இரகசியத்தை அறிந்து கொள்ளும் ஆவல் ஒன்றுக் குப் பத்து மடங்காகப் பெருகியது. எனவே, அவர் சிற்பக்கலை முதலிய வற்றை யெல்லாம் ஒரு பக்கத்தில் கட்டி வைத்து விட்டு, வர்ணச் சேர்க்கை சம்பந்தமான பரிசோதனை களை ஆரம்பித்தார். சிவகாமியின் நாட்டியக் கலை வளர்ச்சியிலே கூட அவருக்குச் சிரத்தை குறைந்து விட்டது. இது சிவகாமிக்கும்



"அவன் இல்லை, அவன்! மத யானை மேல் வேல் எறிந்து உன் சிநேகிதியைக் காப்பாற்றிய வாலிபன் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்திருக்கிறான். அவன் இப்போது காஞ்சிக் கோட்டையின் தளபதியாம். அவனோடு குமார சக்கரவர்த்தி குலாவியதைப் பார்த்தால், சிவகாமியைக் கூட மறந்து விடுவார் போல் தோன்றியது."



"உனக்குத் தெரிந்த லட்சணம் அவ்வளவுதான். அந்தப் பிள்ளைமேல் மாமல்லருக்கு ஏன் அவ்வளவு பிரியம் என்று நான் சொல்லட்டுமா? என் தோழியைக் காப்பாற்றிக் கொடுத்ததற்காகத்தான். கண்ணு! இதிலிருந்தே, மாமல்லரின் மனம் எவ்வளவு உறுதியாயிருக்கிறதென்று தெரிகிறது!" என்றாள் கமலி.

"உன் புத்தி கூர்மையே கூர்மை! கேவலம் ஒரு ரதசாரதியைப் போய் நீ கல்யாணம் செய்துகொண்டாயே? இராஜ்யம் ஆளும் மதிமந்திரியை நீ மணந்துகொண்டிருக்க வேண்டும்!" என்று கண்ணன் சொன்னதற்கு, கமலி, "அதனாலேதான் காதலுக்குக் கண்ணில்லையென்கிறார்கள்; உனக்குத் தெரியாதா?" என்றாள்.

அத்தியாயம் 4

சிவகாமியின் பிறந்த நாள்

மாமல்ல நரசிம்மரின் இருதய மாளிகையில் சிவகாமிக்குப் போட்டியாகப் பரஞ்சோதி எப்படி வந்து சேர்ந்தானோ, அதுபோல் இந்தக் கதையாகிய மாளிகையிலும் அவன் சிவகாமிக்குப் போட்டியாக அமைந்து ரொம்பவும் அதிகமான இடத்தைக் கவர்ந்து வந்திருக்கிறான். இதை எண்ணும் போது பரஞ்சோதியின் மீது நமக்கே கோபமாய்த்தானிருக்கிறது.

ஆகா! சிவகாமியை நாம் பார்த்து எத்தனை காலம் ஆகி விட்டது? காஞ்சியை விட்டு வெளியே போகக் கூடாது என்று மாமல்லருக்குத்தான் சக்கரவர்த்தி கட்டளை இட்டிருக்கிறாரே தவிர, நமக்கு ஒரு தடையுமில்லையல்லவா? எனவே, இனி மேலும் தாமதியாது, அரண்ய மத்தியிலுள்ள ஆயனரின் சிற்ப மாளிகைக்குச் செல்வோம்.

ஆயனரின் வீட்டை நெருங்கும் போது, எட்டு மாதத்துக்கு முன்பு அங்கே நாம் கண்ட காட்சிக்கும் இப்போது நாம் காணும் காட்சிக்கும் உள்ள வித்தியாசம் நம்மைத் தூக்கிவாரிப் போடுகிறது. முதன் முதலில் இங்கே நாம் எந்த நேரத்துக்கு வந்தோமோ, கிட்டத்தட்ட அதே நேரந்தான் இப்போதும். அதாவது சூரியோதயமாகி ஒரு ஜாமம் இருக்கும். ஆனால், அப்போது நாம் கண்ட கலகலப்பு இப்போது இல்லை. 'கல்கல்' என்ற கல்லுளியின் சத்தம் கேட்கவில்லை. ஆங்காங்கு மரங்களின் அடியில் ஆயனரின் சீடர்கள் உட்கார்ந்து சிற்ப வேலை பயின்று கொண்டிருக்கவில்லை. ஒரே ஒரு மரத்தடியைத் தவிர மற்றப்படி அந்த வீட்டின் சுற்றுப்புறமெல்லாம் நிர்மானுஷ்யமாய்க் காணப்பட்டது.

காட்டு மரங்களின் தோற்றத்திலே கூட வித்தியாசமாயிருந்தது. முன்னே நாம் இங்கு வந்திருந்தபோது வஸந்த காலம். விருட்சங்கள் எல்லாம் புதிய தளிர்கள் விட்டிருந்தன.

மாமரங்களில் புதிய தளிர்களுடனே பூங் கொத்துக்கள் குலுங்கின. அரச மரங்களும் ஆலமரங்களும் தங்க நிற இலைகளால் மூடப்பட்டிருந்தன.

இப்போதோ, மரங்களில் முற்றிய கரும் பசுமை பொருந்திய இலைகளும், பாதி காய்ந்த சருகுகளும் காணப்பட்டன. பூமி யெல்லாம் இலைச் சருகுகள் பரவிக் கிடந்தன. சில இடங்களில் குட்டை குட்டையாக மழைத் தண்ணீர் தேங்கி யிருந்தது. அந்தக் குட்டைகளில் கிடந்த இலைகள் அழுகித் துர்நாற்றம் வீசியது.

முதல் நாள் இரவு பெய்த மழைநீர் மரங்களின் இலைகளில் தங்கியிருந்து, குளிர்ந்த வாடைக் காற்று அடிக்கும் போது சலசல வென்று பூமியில் உதிர்ந்த காட்சி, அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலை நினைத்து மரங்களும் கண்ணீர் உதிர்ப்பது போலவே தோன்றியது.

அந்த வன விருட்சங்களில் வாழ்ந்த பட்சிகளின் அமுத கானத்துக்கு மட்டும் எவ்விதக் குறைவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. விதவிதமான மதுரக் குரல்களில் எத்தனை எத்தனையோ கீதங்கள் கேட்டுக்கொண்டு தானிருந்தன. ஆனால், அந்தக் குரல்களிலும் ஒரு வேற்றுமை இருப்பதாகத் தோன்றியது. முன்னே அக்குரல்களில் தொனித்த குதூகலக் களிப்பை இப்போது காணவில்லை. சென்று போன ஆனந்தமான காலத்தை நினைத்து மனங் கசிந்து பாடும் சோக கீதமாக அப்பட்சிகளின் கானம் இப்போது தொனித்தது.

வீட்டை நெருங்கிச் சென்றோமானால், ஒரே ஒரு விருட்சத்தினடியில் மட்டும் யாரோ இரண்டு பேர் உட்கார்ந்து ஏதோ வேலை செய்து கொண்டிருப்பது கண்ணுக்குப் புலனாகிறது.

ஆகா! அவர்களில் ஒருவர் ஆயனர் தான்! ஆனால், மேதை ஒளி பிரகாசித்த அந்த முகத்தில் முன்னம் நாம் பார்த்த சாந்தம் இப்போது எங்கே? அந்தக் கண்களிலே இந்த ஆவல் வெறி எப்போது குடிகொண்டது? அவரும் அவருடன் இருந்த இன்னொருவனும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ஏதேதோ பச்சிலைகளைச் சேர்த்து அவர்கள் கல்லில் வைத்து இடிக்கும் அரைத்தும் சாறு இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அருகில் அடுப்பு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. அதில் ஒரு சட்டியில் பச்சிலைச் சாறு கொதித்துக் கொண்டிருந்தது. சுற்றுப்புறத்தில் பற்பல சட்டிகளில் வர்ணக் குழம்புகள் காணப்பட்டன. இதை யெல்லாம் பார்த்ததில், ஆயனர், சித்திரம் எழுதுவதற் குரிய வர்ணச் சேர்க்கை முறைகளைப் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார் என்று ஊகிக்கலாம்.

ஆம்; போர்க்களத்திலிருந்து சக்கரவர்த்தி, மாமல்லபுரத்திலும் மற்ற இடங்களிலும் நடந்து கொண்டிருந்த சிற்பப் பணிகளை யெல்லாம் நிறுத்தி விடும்படி கட்டளை அனுப்பிய பிறகு, ஆயனர் தமது அருமை மகளை அழைத்துக் கொண்டு பழைய அரண்ய வீட்டுக்கு வந்து சேர்ந்தார். சக்கரவர்த்தியின் கட்டளைப்படியே ஆயனருடைய சீடர்களைத் தொண்டை மண்டலத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் பாரத மண்டபங்களைக் கட்டுவதற்காக அனுப்பி விட்டார். ஒரே ஒரு சிற்றாளை மட்டும் தம்முடைய உதவிக்கு வைத்துக் கொண்டிருந்தார்.

சில காலமாகவே, ஆயனருடைய உள்ளமானது சிற்பக் கலையிலும் நாட்டியக் கலையிலும் ஈடுபடவில்லை. நாகார்ஜுன பர்வதத்துக்கு அனுப்பிய பரஞ்சோதி திரும்பி வருவதை அவர் வெகு ஆவலுடன் எதிர்பார்க்கலானார். சில நாளைக்கெல்லாம் அவருக்குப் பரஞ்சோதியைப் பற்றிய வெகு விசித்திரமான செய்திகள் கிடைத்தன. அவன் போகும் வழியில் பல்லவ சைன்யத்தில் சேர்ந்து, பல்லவக் குதிரைப் படையின் தளபதியாகி விட்டான் என்றும், அதிசயமான வீரச் செயல்களை யெல்லாம் புரிந்து வருகிறான் என்றும் வதந்திகள் உலா

ஞர்கள்? சுகமா யிருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"சிவகாமி" என்ற பெயரைக் கேட்டதும் மாமல்லரின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பரஞ்சோதி கவனியாமல் போகவில்லை. "ஆஹா! வஜ்ரடாஹாவின் கூற்றுக்கு இவரே உதாரணமா யிருக்கிறார்!" என்று மனதில் எண்ணிக் கொண்டான்.

மாமல்லர் மறுமொழி கூறிய போது அவருடைய குரலில் கூட மாறுதல் இருந்தது.

"சுகமா யிருக்கிறார்கள் என்று தான் அறிகிறேன், தளபதி! ஆனால் அவர்களை நான் பார்த்துப் பல மாதங்கள் ஆயின. ஆயனரின் பழைய அரண்ய வீட்டிலேதான் அவர்கள் இருக்கிறார்கள். சக்கரவர்த்தியின் கட்டளைப்படி கல் தச்சர்களை யெல்லாம் பாரத மண்டபம்* கட்டுவதற்கு அனுப்பிய பிறகு, ஆயனரும் மாமல்ல புரத்தி லிருந்து தமது அரண்ய வீட்டுக்கு வந்துவிட்டார்" என்று மாமல்லர் கூறியபோது, அவருடைய வார்த்தைகளில் முன்னே காணப் படாத உணர்ச்சி தொனித்தது.

மறுபடியும் மாமல்லர் பரஞ்சோதி யின் கரங்களை அழுத்திப் பிடித்துக் கொண்டவராய் உணர்ச்சி ததும்பிய குரலில் கூறுவார்:—"தளபதி! பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எவ்வளவோ சேவை இந்த எட்டு மாதத்தில் செய்திருக்கிறீர்; இன்னும் எவ்வளவோ செய்யப் போகிறீர். ஆனால், அன்றிரவு நீர் செய்த வீரச் செயலைப் போன்ற மகத்தான சேவை வேறொன்றும் இருக்க முடியாது. பல்லவ சாம்ராஜ் யத்தின் சிற்ப மன்னனையும், கலா ராணியையும் மதயானையின் கோபத்திலிருந்து காப்பாற்றினீர் அல்லவா? அதை நான் எவ்வளவு ஆரம் பாராட்டுகிறேன் என்பதற்கு இதோ அடையாளத்தைப் பாரும்!" என்று கூறி, அன்று மத யானை மீது பரஞ்சோதி எறிந்த வேலை எடுத்து நீட்டினார்.

மாமல்லரின் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளினால் பரஞ்சோதியின் மனமும் கனிந்திருந்தது. எனவே, அவன் மறுமொழி கூற முடியாதவனாய், வேலை வாங்கிக் கொள்வதற்காக ஒரு கையினால் அதன் அடிப் பகுதியைப் பிடித்தான்.

நரசிம்ம வர்மர் வேலைக் கொடுக்காமல் தாமும் அதை ஒரு கையினால் பிடித்துக் கொண்ட வண்ணம் சொல்வார்:—"இந்த ஏகாம்பரர் சந்நிதியில் நான் எத்தனையோ தடவை பிரார்த்தனை செய்திருக்கிறேன், எனக்கு ஓர் உற்ற நண்பனை அளிக்க வேண்டுமென்று. அந்தப் பிரார்த்தனையின் பயனாகவே நீர் இந்தக் காஞ்சிக்கு வந்ததாக நம்புகிறேன். தளபதி! இதே சந்நிதியில் நீரும் நானும் இன்று சிநேகப் பிரதிக்ஞை செய்து கொள்வோம். நமது உடல்களில் உயிர் உள்ள வரைக்கும் நாம் வாழ்க்கைத் துணைவர்களா யிருப்பதென்றும், பரஸ்பரம் ஒருவருடைய காரியத்தை இன்னொருவரின் காரியமாகவே பாவிப்பதென்றும் உறுதி செய்து கொள்வோம். ஆயனரையும் சிவகாமியையும் காத்த இந்த வீர வேலின் மீது ஆணை வைத்து நம்முடைய நட்பை நிலைப்படுத்திக் கொள்வோம்" என்றார்.

பரஞ்சோதியும் கண்களில் நீர் ததும்ப, "அப்படியே யாகட்டும்!" என்று கூறினான்.

ஏகாம்பரர் சந்நிதியில் அப்போது 'கண கண'வென்று தீபாராதனை மணி ஒலித்தது.

* * * *

அன்றிரவு கண்ணபிரான் கமலியிடம் சொன்னான்:—

"என் கண்ணே! உன் சிநேகிதி சிவகாமியின் சக்களத்தியை இன்று ரதத்தில் வைத்து ஓட்டினேன். அதை நினைத்தால் எனக்குத் துக்கம் துக்கமாய் வருகிறது!"

"அது யார் அவள்? இப்பொழுதே சொல்லு! உடனே போய் விஷங் கொடுத்துக் கொன்று விடுகிறேன்" என்றாள் கமலி.

---

* பல்லவ சக்கரவர்த்திகளின் காலத்தில் தொண்டை மண்டலத்துக் கோயில்களில் பாரத மண்டபங்கள் கட்டப்பட்டதுடன், பாரதம் வாசிப்பவர்களுக்கு மானியம் விடப் பட்டதென்பது கல்வெட்டுக்களின் ஆதாரமுடைய சரித்திர உண்மையாகும்.

ரத்தில் மீண்டும் இந்த சௌந்தர்ய நகரம் அழகும் பொலிவும் இழந்து இருளடையப் போகிறதல்லவா?— இந்த எண்ணங்கள் எல்லாம் ரதத்தில் வந்து கொண்டிருந்தபோது பரஞ்சோதியின் உள்ளத்தில் இடையிடையே எழுந்து கொண்டிருந்தன.

ஏகாம்பரநாதர் கோயில் சந்நிதிக்கு வந்ததும், அந்தத் திவ்ய சந்நிதியின் மகோந்நதமான தோற்றத்திலிருந்தே, அதுதான் ஏகாம்பரர் கோயிலாயிருக்க வேண்டுமென்று பரஞ்சோதி ஊகித்து, தன் ஊகம் சரிதானா என்று மாமல்லரை வினவினான்.

"ஆம்; தளபதி! இந்த சந்நிதிக்கு இதற்கு முன்னால் நீர் வந்ததே இல்லையல்லவா?" என்று மாமல்லர் கேட்டார்.

"இல்லை; வந்ததில்லை. முன் தடவை இந்த நகரத்திற்குள் நான் நுழைந்த போது, ஏகாம்பரர் சந்நிதியைத்தான் தேடிக் கொண்டு வந்தேன். ஆனால் இந்த இடம் வரையில் அன்றைக்கு வந்து சேரவில்லை. கொஞ்சம் ரதத்தை நிறுத்தச் சொல்லுங்கள். காஞ்சியின் இருதய ஸ்தானத்தை நன்றாய்ப் பார்க்கிறேன்" என்றான் பரஞ்சோதி.

உடனே ரதமும் நின்றது.

கோயிலுக்குள்ளே ஒரு தீப வரிசைக்குள் இன்னொரு தீப வரிசையாக முடிவின்றி ஜொலித்துக் கொண்டிருந்த அலங்கார தீபங்களையும், கோயிலுக்கெதிரே தேரடியையும், அங்கிருந்து நாலா பக்கத்திலும் பிரிந்து சென்ற தேரோடும் வீதிகளையும், குப்பல் குப்பலாகப் பலவகைப் புஷ்பங்கள் குவிந்து கிடந்த கடைகளையும், தேங்காயும் கதலியும் மலை மலையாகக் குவிந்து கிடந்த கடைகளையும், அற்புத சிற்ப வேலைத் திறமுடைய தூண்களின் மேலே அமைந்த நூற்றுக்கால் மண்டபங்களையும் பரஞ்சோதி பார்த்து விட்டு, "ஆஹா! புலிகேசியின் காதலுக்குக் காரணம் இல்லாமற் போகவில்லை!" என்றான்.

"புலிகேசியின் காதலா? என்ன சொல்கிறீர், தளபதி?" என்று மாமல்லர் கேட்டார்.

"ஒன்றுமில்லை; புலிகேசி இந்தக் காஞ்சி சுந்தரியின் மேல் கொண்டிருக்கும் காதலைப் பற்றி வீரர் வஜ்ரபாஹு எனக்குச் சொன்னார். காதலியின் பெயரைக் கேட்டதும் காதலனுடைய முகத்திலே என்ன மாறுதல் உண்டாகுமோ, அம்மாதிரி மாறுதல் காஞ்சி என்னும் பெயரைக் கேட்டதும் புலிகேசியின் முகத்தில் உண்டாயிற்றாம்!"

"புலிகேசியும் அவன் காதலும் நாசமாய்ப் போகட்டும், இப்போது நாம் என்ன செய்யலாம்? கோயிலுக்குள் போய் ஸ்வாமி தரிசனம் செய்வோமா? அல்லது இன்னொரு நாள் கோயில் பார்த்துக் கொள்ளலாமென்று அரண்மனைக்கே போகலாமா?" என்றார் மாமல்லர்.

அதற்கு மறுமொழி சொல்லாமல் பரஞ்சோதி, "பிரபு! இங்கே திருநாவுக்கரசர் மடம் எது?" என்று கேட்டான்.

"அதோ வெறுமையாய்க் கிடக்கிறதே, அந்தக் கட்டிடந்தான்......"

"ஆஹா! இந்த மடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காகத் தான் வந்தேன். நான் கல்வி கற்பதற்காக வந்த முகூர்த்தம் மடத்தையே மூடும்படியாகி விட்டது!" என்றான் பரஞ்சோதி.

நரசிம்மவர்மர் மீண்டும் இளநகை புரிந்து விட்டு, "பல்லவ சாம்ராஜ்யத்துக்கு நீர் எவ்வளவோ மகத்தான சேவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் போது வாகீசப் பெருமானின் சீடராக நீர் எப்படிப் போயிருக்க முடியும்? அதோடு, என்னிடம் நீர் தமிழ் பயில வேண்டும் என்றும் ஏற்பட்டிருக்கிறதல்லவா?" என்றார்.

"இதையெல்லாம் தெரிந்து கொண்டுதான் அன்றிரவு அந்தப் பல்லவ குலத்துப் பட்டத்து யானை மதங்கொண்டு ஓடி வந்ததோ, என்னவோ? அதன் காரணமாகத்தானே இப்படியெல்லாம் நேரிட்டது?" என்றான் பரஞ்சோதி.

உடனே சட்டென்று நினைத்துக் கொண்டவன்போல், "ஐயா! ஆயனரும் சிவகாமியும் எங்கே இருக்கி

சிவகாமியின் சபதம்

கல்கி

[பூர்வ கதை: சோழ நாட்டில் திருச்செங்காட்டாங்குடி என்னும் கிராமத்திலிருந்து காஞ்சிமா நகருக்குத் தமிழ்க் கல்வி பயில்வதற்காக வந்த பரஞ்சோதி என்னும் வாலிபன், ஆயனச் சிற்பியாருக்காக அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வரும் பொருட்டு வடநாடு செல்கிறான். வழியில், பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்து கொண்டிருந்த பெரும் வாதாபி சைன்யத்தைப் பார்க்கிறான். அந்தச் சைன்யத்தைத் தடுத்துப் போர் புரிவதற்கு ஆயத்தமாயிருந்த பல்லவ சைன்யத்தில் சேர்ந்து குதிரைப் படைத் தலைவனாகிப் பல வீரச் செயல்கள் புரிகிறான். பிறகு மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரில், காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்வதற்காகக் கோட்டைத் தளபதியாகித் திரும்பி வருகிறான். காஞ்சியிலிருந்த குமார சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மர் அவனை வரவேற்று ரதத்தில் ஏற்றிக் கொண்டு காஞ்சிமா நகரைச் சுற்றிக் காட்டுகிறார்.]

இரண்டாம் பாகம்: காஞ்சி முற்றுகை

அத்தியாயம் 3

சிநேகப் பிரதிக்ஞை

ஒரு பக்கம் மாமல்லருடன் பேசிக்கொண்டும் சல்லாபம் செய்துகொண்டும் வந்த போதே, மற்றொரு பக்கத்தில் காஞ்சிமா நகரின் விசாலமான இராஜ வீதிகளையும், அவ்வீதியின் இருபுறமும் காணப்பட்ட மாட மாளிகைகளையும், ஈ மொய்ப்பதுபோல் ஜனக்கூட்டம் நிறைந்த கடை வீதிகளையும், இடையிடையே தீபாலங்காரங்களுடன் விளங்கிய சிவாலயம் விஷ்ணு ஆலயங்களையும், சைவ வைஷ்ணவ மடங்களையும், பௌத்தர் சமணர்களின் கோயில்களையும், வேத கோஷம் எழுந்த ஸம்ஸ்கிருத கடிகை ஸ்தானங்களையும், சிற்ப சித்திர கலா மண்டபங்களையும் பரஞ்சோதி பார்த்துக் கொண்டு வந்தான்.

எட்டு மாதத்துக்கு முன்பு அவன் தெற்குக் கோட்டை வாசல் வழியாகப் பிரவேசித்த அன்றிரவு இருந்ததைக் காட்டிலும் இன்று நகரில் கலகலப்பும் களையும் அதிகமாயிருந்தன. அவன் வந்த தினத்தில், யுத்தச் செய்தி திடீரென்று வந்து, கோட்டை வாசல் சாத்தப்பட்டு, நகரெல்லாம் ஒற்றர் வேட்டையும் நடந்துகொண்டிருந்தபடியால் காஞ்சி நகரம் அவ்வளவு பொலிவிழந்து காணப்பட்டது போலும்! அந்த ஆரம்ப பீதிக்குப் பிறகு ஜனங்கள் மறுபடியும் ஒருவாறு உற்சாகமடைந்து எல்லாக் காரியங்களும் வழக்கம்போல் நடந்து வருகின்றன போலும்! ஆனால், இதெல்லாம் எத்தனை நாளைக்கு? அதி சீக்



குழந்தைகளுக்கு ஆரோக்கியத்துடன் திரேக புஷ்டியையும் முகமலர்ச்சியையும் கொடுப்பது பெரீஸ் பிஸ்கட்டுகள் என்று ஒவ்வொரு தாய் தந்தையர்களும் அறிந்திருப்பதால் அவர்கள் **எப்பொழுதும் பெரீஸ் பிஸ்கட்டுகளையே விரும்புகிறார்கள்**

பெரீஸ்
பிஸ்கட்ஸ்

குழந்தைகளைப் போஷித்து வளர்க்கும் ஆகாரம்

சிற்றுண்டிகளுக்கு சிறந்ததோர் உணவு.

PERRY & COMPANY, BISCUITS MANUFACTURERS, USILAMPATTI

"பயம் என்பதை விட்டு விட்டுத் தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்வதே ராஜதருமம். பகைவன் அதிக அபிவிருத்தி அடைவதற்குள் முன் ஜாக்கிரதையாகச் சக்தி இருக்கும்போதே வேலை செய்ய வேண்டுமல்லவா? வியாதியும் யமனும் நமக்காகக் காத்திருக்குமா? சூதாட்டத்தை நான் புதிதாக உண்டாக்கவில்லை. முன்னோர்கள் அதையும்தான் உண்டாக்கி இருக்கிறார்கள். சூதாட்டத்தில் அபாயமும் உயிர் நாசமும் இல்லாமல் க்ஷத்திரியர்கள் தங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்று துரியோதனன் தகப்பனை வற்புறுத்தினான்.

திருதராஷ்டிரன், "மகனே! நான் விருத்தாப்பியம் அடைந்து விட்டேன். நீயே அரசன். உன் இஷ்டப்படி நீ செய்யலாம். நீ சொல்லும் வழி எனக்குப் பிடிக்கவில்லை. பிறகு வருந்தப்படுவாய். இது விதியின் வேலை" என்றான்.

மகனுடைய தொந்தரவைப் பொறுக்க மாட்டாமல் திருதராஷ்டிரன் சரி என்று ஒப்புக் கொண்டு, சூதாட்டத்திற்குத் தகுந்த சபா மண்டபம் கட்ட வேலைக்காரர்களுக்கு உத்தரவும் கொடுத்தான். ஆனால், ரகசியமாக விதுரனிடம் இதைப் பற்றிக் கலந்து பேசினான்.

விதுரன், "அரசனே! இது குலத்திற்கு நாசம் கொண்டு வந்து விடும். இந்த யோசனையின் பயனாக நம்முடைய குலத்தில் கோபமும் கலகமும் உண்டாகிப் பெரும் ஆபத்து நேரிடும். வேண்டாம்!" என்றான்.

மகனுடைய வேண்டுகோளைத் தடுக்க முடியாதவனாகத் திருதராஷ்டிரன், "விதுரா, விதி நமக்கு அனுகூலமாக இருந்தால், இந்தச் சூதாட்டத்தைப் பற்றி எனக்குப் பயம் இல்லை. விதி பிரதிகூலமாயிருந்தால், நாம் என்ன செய்து என்ன பயன்? உலக மனைத்தும் விதியின் வசமே இருந்து நடத்தப்பட்டு வருகிறது. நீ போய் யுதிஷ்டிரனை ஆட்டத்துக்கு அழைத்தேன் என்று எனக்காகச் சொல்லி அவனை அழைத்து வா!" என்று விதுரனுக்குக் கட்டளையிட்டான்.

இவ்வாறு விதியின் கதியையும் மனிதன் கடமையையும் அறிந்தும், புத்தியைக் கலவரப் படுத்திக்கொண்டு மனவுறுதியற்ற திருதராஷ்டிரன் துரியோதனனிடம் வைத்திருந்த பற்றினால் அவன் சொல்லுக்கு இசைந்தான். அரசன் கட்டளைப்படி விதுரனும் யுதிஷ்டிரனிடம் சென்றான்.

தகப்பன் சொல் துரியோதனனுக்குப் பிடிக்கவில்லை.

"இயற்கை அறிவில்லாமல் எவ்வளவு கல்வி கேள்விகள் இருந்தும் என்ன பயன்? பக்ஷணங்களின் சுவை அவற்றில் மூழ்கி மிதக்கும் அகப்பைக்குத் தெரியாததுபோல் நீர் நீதி சாஸ்திரங்களில் மூழ்கியிருந்த போதிலும் அவற்றின் பொருளை அறியாமல் பேசுகிறீர். உலக நடை வேறு, அரசர்களின் தருமம் வேறு என்று பிரகஸ்பதி சொல்லியிருக்கிறார். அரசர்களுக்குப் பொறுமையும் திருப்தியும் தருமமல்ல. க்ஷத்திரியனுடைய கடமை எப்போதும் வெற்றியைத் தேடுவதே யாகும். தருமமாயினும் சரி, அதருமமாயினும் சரி, ஜயத்தைத் தேடுவதே அரசன் தொழில்" என்று துரியோதனன் தகப்பனிடம் ராஜநீதியை எடுத்துச் சொன்னான்.

பிறகு சகுனியும் பேசினான். சூதாட்ட யோசனையை திருதராஷ்டிரனுக்குச் சொன்னான். "யுத்தமின்றித் துரியோதனனுடைய துயரத்தைத் தீர்க்க முடியும்" என்றான்.

திருதராஷ்டிரன் மன உறுதி இழப்பதைக் கண்டு துரியோதனன், "கபடமாகவோ, வெளிப்படையாகவோ எதிரியை வீழ்த்தக்கூடிய எல்லா உபாயங்களும் க்ஷத்திரியனுக்கு ஆயுதமாகும். வெட்டும் கருவியே ஆயுதமல்ல. மித்திரன் யார், சத்துரு யார் என்பது பிறப்பாலும் குலத்தாலும் நிர்ணயமாகாது. எவனால் துன்பம் உண்டாகிறதோ அவனே பகைவன். சகோதரனானாலும் அவன் பகைவனாவான். திருப்தி கொண்டு வாழ்வது அரசர்களுடைய வாழ்க்கைக்குப் பொருந்தாது. பகைவனுடைய அபிவிருத்தியைப் பார்த்தும் கவனியாமல் விட்டு விடுகிற அரசன் அழிந்து போவான். சத்துருவின் வளர்ச்சியை முன்னதாகவே தெரிந்துகொண்டு, அதைத் தகுந்த சூழ்ச்சியால் அடக்கப் பார்ப்பதே ராஜதருமம். வேரில் உண்டான புற்று மரத்தை அழிப்பதுபோல் நம்முடைய குலத்தவர்களின் சம்பத்து நம்மை அழித்து விடும்" என்றான்.

"குந்தி மகனை 'ஆட்டத்திற்கு வா' என்று நீ சொன்னால் மட்டும் போதும். மற்ற வேலை எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றான் மகா புத்திசாலியும் பாவியுமாகிய சகுனி.

"யுத்தம் என்பதில்லாமல் உயிருக்கு ஆபத்தில்லாமல் பாண்டவர்களுடைய சம்பத்தை எனக்குச் சகுனி சம்பாதித்துத் தருவான். நீர் யுதிஷ்டிரனை அழைக்க மாத்திரம் உடன்பட வேண்டும்" என்றான் துரியோதனன்.

திருதராஷ்டிரன், "இது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. தம்பி விதுரனைக் கேட்கலாம். அவன் அறிவாளி. அவன் சொல்லில் நான் எப்போதும் நிற்பவன்" என்றான்.

விதுரனுடன் ஆலோசிப்பது துரியோதனனுக்குச் சம்மதமில்லை. "விதுரர் சாதாரண தருமத்தைத்தான் உபதேசிப்பார். அது வெற்றிக்கு உதவாது. அரசர்களுக்கு ஜயம் வேண்டின் தருமத்தைப் புறக்கணிக்க வேண்டியதாகும். தர்மசாஸ்திர நிபுணர்களாகிய விதுரரும் வியாசரும் நம்முடைய முன்னேற்றத்திற்கு விரோதிகளானவர்கள். விதுரருக்கு என்னிடத்தில் அன்பில்லை. அவருக்குப் பாண்டவர்களிடமே பிரியம். இது உமக்குத் தெரியாது" என்றான்.

"பாண்டவர்கள் பலவான்கள். அவர்களோடு விரோதம் செய்து கொள்வது யுக்தம் என்று எனக்குத் தோன்றவில்லை. சூதாட்டம் என்பது பகைக்குக் காரணமாகும். சூதாட்டத்தில் உண்டாகும் கெட்ட மனப்பான்மை கரை கடந்து போகும். வேண்டாம்" என்றான் திருதராஷ்டிரன்.



★

முன்னெச்சரிக்கை!

"ஐயா! கிணற்று ஜலம் ஒரே உப்பாக இருக்கிறதே; இதைப் போய்ப் பிரமாதமாகப் புகழ்ந்தீர்களே!"

"ஆமாம்: கிணற்றிலே ஜலம் சமுத்திரமாய் இருக்கும் என்றுதானே சொன்னேன்!"

★

வியாசர் விருந்து

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ஆட்டத்திற்கு அழைப்பு

துரியோதனனும் சகுனியும் திருதராஷ்டிரனிடம் சென்றார்கள். சகுனி முதலில் பேச ஆரம்பித்தான்: "அரசனே! துரியோதனன் துயரத்தினால் இளைத்து இரத்தம் இழந்து வெளுத்துப் போயிருக்கிறான். தாங்க முடியாத அவனுடைய துக்கத்தை நீர் விசாரிக்கவே யில்லை. ஏன் அவனைப் பற்றிக் கவலை யில்லாமலிருக்கிறீர்?" என்றான்.

மகனிடத்தில் அளவு கடந்த அன்பு கொண்ட திருதராஷ்டிரன் துரியோதனனைக் கட்டித் தழுவி, "நீ துயரப்படுவதற்குக் காரணம் ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே! எல்லா ஐஸ்வர்யமும் பெற்றிருக்கிறாய். உலகமெல்லாம் உன் சொல்லுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. எல்லாவித சுகங்களும் தேவர்களுக்கு இருப்பதுபோல் உனக்கு இருக்க ஏன் துயரப்படுகிறாய்? வேதமும் அஸ்திர வித்தைகளும் சாஸ்திரங்களும் அங்க லக்ஷண பூரணமாய்க் கிருபாசாரியரிடமும், பலராமனிடமும், துரோணரிடமும் படித்திருக்கிறாய். மூத்த மகனாய் ராஜ்ய லக்ஷ்மியை அடைந்திருக்கிறாய். உன் விசனத்திற்கு என்ன காரணம்? சொல்" என்றான்.

துரியோதனன், "தந்தையே! அற்ப மனிதனைப்போல் உண்கிறேன், உடுக்கிறேன், அவமானத்தையும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். இது என்ன வாழ்க்கை!" என்று ஆரம்பித்துத் தன் துயரத்தை விவரமாகத் தெரிவித்தான். பாண்டவர்களுடைய நகரத்தில் தான் பார்த்த செல்வத்தை எடுத்துச் சொல்லித் தன் பொறாமையைத் தகப்பனுக்குத் தெரியப்படுத்தி, "உள்ளது போதுமென்றிருப்பது க்ஷத்திரிய தருமம் அல்ல. பயமும் தயையும் அரசர்களுடைய கௌரவத்தைத் தாழ்த்தி விடுகின்றன. யுதிஷ்டிரனிடமுள்ள ராஜ்ய லக்ஷ்மியைப் பார்த்த பிறகு என் செல்வமும் சுகமும் எனக்குத் திருப்தி கொடுக்கவில்லை. அரசனே! பாண்டவர்கள் உயர்ந்து போனார்கள்; நாம் வீழ்ந்தோம்" என்று அலறினான்.



துரியோதனனும் திருதராஷ்டிரனும்

திருதராஷ்டிரன், "புத்திரனே! எனக்கு நீ மூத்த புத்திரன். பட்ட மகிஷியின் மகன். பாண்டவர்களைப் பகையாதே. பகையினால் துக்கமும் மரணமுந்தான் உண்டாகும். வஞ்சகம் அறியாத யுதிஷ்டிரனை ஏன் பகைக்கிறாய்? அவனுடைய பலமும் புகழும் செல்வமும் நம்முடையதுமாகும். நம்முடைய மித்திரர்களே அவனுக்கும் மித்திரர்கள். நம் பேரில் அவனுக்கு அசூயையாவது விரோதமாவது என்னவும் இல்லை. குலத்திலும் பராக்கிரமத்திலும் அவனுக்குச் சரியாக நீயும் இருக்கிறாய். சகோதரனைக் கண்டு ஏன் பொறாமைப் படுகிறாய்? வேண்டாம்!" என்று மகன் பேரில் அன்பு மேலிட்டுத் தன்னுடைய அறிவில் கண்ட நியாயத்தை எடுத்துச் சொன்னான்.

வட்ட மேஜை

"பார்வதி நிவாஸ்" பம்பாய்.
20—7—44.

ஒரே நிலையான உமது இடைவிடாத அரசியல் பிரசாரம் பலனளித்திருப்பதைப் பார்க்க என் சந்தோஷத்தை அடக்கி வைத்திருக்க முடியவில்லை.

சுயநலமற்று, தேச சேவையே பிரதானம் எனக் கருதி, பாரபக்ஷமில்லாமல், எது நியாயம் என்பதை உணர்ந்து, ராஜாஜியின் கொள்கையை ஆதரித்து, காந்திஜியின் அபிப்பிராயமும் ராஜாஜியின் அபிப்பிராயமும் தங்கள் அபிப்பிராயமும் வேறுபட்டதல்ல என்பதை நிரூபித்து விட்டீர்கள்.

"ராஜாஜி சங்கடமான அரசியலை விட்டுச் சங்கீதம் பாடப் போவதாக" உளறியவர்கள் இப்போது என்ன சொல்வாரோ குளறுகிறார்கள். நியாயமாக, அவர்கள் சங்கடமான பத்திரிகைத் தொழிலை விட்டு விட்டுச் சமையலுக்குப் போக வேண்டும். அதனால் சமையல் தொழில் கெடுமோ என்றுதான் பயப்படவேண்டியிருக்கிறது!

கே. ஆர். கோபாலன்.

போபத்வாடி, பம்பாய்
22—7—44

இந்த வாரத்து 'கல்கி'யில் வந்துள்ள தங்கள் தலையங்கத்தை இருதய பூர்வமாக வரவேற்கிறேன். தீர்க்க திருஷ்டியுடன், ராஜாஜியின் உயர்ந்த லட்சியங்களை, முதலிருந்தே மகத்தான எதிர்ப்புக்கிடையே ஆதரித்துவந்த தங்களுக்குத் தமிழ்நாடு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது.


இரண்டு வருஷங்களுக்கு முன், ஹிந்து-முஸ்லிம் சமரசத்திற்கு ராஜாஜி ஒரு சிறந்த வழியைக் காட்டினார். அந்த யோசனையின் பயனாக வந்த அம்முடிவைக் காங்கிரஸ் திரஸ்காரம் செய்தது. அப்பொழுது தவறினால், தேசம் எவ்வளவு மகத்தான கஷ்டங்களுக்கு ஆட்பட்டது என்பதை நம்மால் மறக்க முடியவில்லை. போலி காந்தி-காங்கிரஸ் பக்தர்களும், சுயநலக்காரர்களும், அரசியல் 'சூர்ப்பணகை'களும், ராஜாஜியை—தீர்க்க திருஷ்டி, சிறந்த அறிவு, தியாக புத்தி இவைகளே உருவெடுத்து வந்த தமிழ்நாட்டின் தவப்புதல்வர்—ராஜாஜியை நாக்கில் நரம்பின்றித் தூற்ற ஆரம்பித்தார்கள். ஏன்?

எந்தப் பத்திரிகை ராஜாஜியைக் கீழ்த்தரமான போக்கில் எதிர்த்து வசை வெள்ளம் புரள எழுதியதோ, அதே பத்திரிகை இன்று அவரது யோசனையைப் பற்றி வழுவழா குழுகுழா என்று மெழுகியிருக்கிறது. உண்மையாக ராஜாஜியின் யோசனையால் தேசம் துரோகத்திற்கு உட்படும் என்றும் பட்சத்தில் இப்பொழுதும் அதை வற்புறுத்தி காந்திஜியை எதிர்த்து அந்தக் கோரிக்கைக்கு அவர் அங்கீகாரம் கொடுக்கக் கூடாது என்று எழுதக் கூடிய தைரியம் ஏன் இப்பொழுது இல்லை? இதிலிருந்து என்ன வெளிப்படுகிறது? காலத்திற்குத் தகுந்தபடியும் ஆட்களுக்கு ஏற்றவாறும் அபிப்பிராயம் எழுதி ஜனங்களிடைக் குழப்பத்தை ஏற்படுத்தி வரும் கைங்கர்யத்தைச் சில பத்திரிகைகள் நடத்தி வருகின்றன. இதைக் கண்டு நாம் அவமானப்படாமல் வேறு என்ன செய்ய முடியும்?


ஆர். நாராயணன்.

[வாழ்த்துக் கடிதம் எழுதியுள்ள நேயர்களுக்கெல்லாம் வந்தனம். பத்திரிகைகள் தங்களுக்கு உசிதமாகத் தோன்றும் அரசியல் அபிப்பிராயங்களை வற்புறுத்தியது பற்றி நாம் குறை கூறுவதற்கில்லை. ராஜாஜியின் யோசனையை முன்னே எதிர்த்தவர்கள் இப்போது தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டது பற்றியும் நாம் மகிழ வேண்டியதே. ஆனால் தமிழ் நாட்டின் ஒப்பற்ற தியாக மூர்த்தியான தலைவரை நாக்கில் நரம்பின்றித் தூஷித்ததையும் அவரை அவமதிக்கும் படங்கள் போட்டதையும் தமிழ் நாட்டார் ஒரு நாளும் மறக்க முடியாது. அந்தக் குற்றத்துக்கு எதுவும் தக்க பிராயச்சித்தமாகாது. —ஆசிரியர்]

ஒரே தீட்டல்!



ஒரு சித்திரக்காரர் ஒரு முகத்தின் பாவத்தை இரண்டு அல்லது மூன்று தீட்டலில் மாற்றி விடுகிறார்.



ஆனால், அம்பியின் உபாத்தியாயரோ, ஒரே ஒரு தீட்டலில் மாற்றி விடுகிறார்.

ஆர்ச் :—கடவுள் காப்பாற்றினர் என்று எப்படித் தெரியும்?

வைமன் :—ஹிட்லர் சொல்லித்தான்.

ஆர்ச் :—ஹிட்லரை ஒருநாளும் கடவுள் காப்பாற்றியிருக்க முடியாது.

சர்ச்சில் :—ஏன்?

ஆர்ச் :—கடவுள் ஜெர்மனிக்குள் போவதேயில்லை.

கிரிப்ஸ் :—போகாதது பெரிய தவறு.

ஆர்ச் :—எப்படி?

கிரிப்ஸ் :—கடவுள் கொஞ்சம் அங்கே போய், விழுந்த குண்டை மூன்றுகளும் தள்ளி விடப் பண்ணியிருந்தால், எவ்வளவு சௌகரியமாய்ப் போயிருக்கும்? நான் மாஸ்கோவுக்குப் போய் ...

சர்ச்சில் :—இந்தச் சின்னக் காரியத்தைச் செய்யாத கடவுளை பிரிட்டிஷ் கட்சி என்று எப்படிச் சொல்வது?

ஆர்ச் :—கடவுள் நம்முடைய கட்சிதான்; சந்தேகமில்லை. இப்போது ஹிட்லருக்குச் செய்ததை நமக்கும் செய்திருக்கிறார். கிளைவ் மூன்று தடவை தன்னைத்தானே சுட்டுக் கொண்டபோது அவனைப் பிழைக்க வைக்கவில்லையா? அப்போது கிளைவைக் கடவுள் காப்பாற்றியிராவிட்டால், அவன் இந்திய தேசம் போயிருப்பானா? அங்கே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்திருப்பானா?

சர்ச்சில் :—இந்திய விஷயத்தைப் பற்றி அமெரி பதில் சொல்லட்டும்.

அமெரி :—கடவுள் கிளைவைக் காப்பாற்றியது உண்மைதான். ஆனால், இப்போது கொகலை அனுப்பி இந்தக் காந்தியை என்னத்திற்காக விடுதலை செய்யப் பண்ணினார்? அந்தப் பொல்லாத மனுஷர் என் பிராணனை என்னமாய் வாங்குகிறார், தெரியுமா?

சர்ச்சில் :—அது இருக்கட்டும். கடவுளைப் பற்றி என்ன தீர்மானம் செய்கிறது, சொல்லுங்கள்!

அமெரி :—இன்னொரு தடவை இம்மாதிரி சந்தர்ப்பம் வரும்போது கடவுள் அதைத் தவறவிட்டால், அப்புறம் கடவுளுக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சுயாட்சியோ, குடியேற்ற நாட்டு உரிமையோ, பாகிஸ்தானோ ஒன்றும் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட வேண்டும்.

சர்ச்சில்:—எப்படியும் அமெரி, அமெரிதான்!

அமெரி :—ஆனால், இந்தக் கிரிப்ஸ் கடவுளிடம் தூது போகிறேன் என்று ஆரம்பிக்கக் கூடாது! [சிரிப்பு.]

கிரிப்ஸ் :—அட்லாண்டிக் சாஸனமாவது கடவுளுக்கு உண்டோ இல்லையோ?

அமெரி :—இல்லை. [பலத்த சிரிப்பு]

கடவுள் ஜாக்கிரதை!

"யமன்"

காட்சி 1

இடம்: பெர்லின். **நேரம்:** காலை.

[ஹிட்லர் வீராவேசத்துடன் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு நிற்கிறார். அவருக்கெதிரே கோரிங்கும், ஹிம்லரும், கெபல்ஸும் கம்பீரமாகப் பயந்து நடுங்குகிறார்கள்.]

ஹிட்லர்:—கடவுளைக் கைப்பிடியாகப் பிடித்து இங்கே கொண்டு வர வேண்டும், தெரிகிறதா?

[ஹிட்லருடைய கையில் ஒரு பிடி தலைமயிர் வந்து விடுகிறது. மற்றவர்கள் அதிகமாக நடுங்குகிறார்கள்.]

கடவுளை நான் உடனே பார்த்தாக வேண்டும். அவருடைய மோசடிகளைப் பற்றிக் கேட்கவேண்டும். 'உலகத்தை ஆளும் பொறுப்பு உன்னுடையது' என்று கடவுள் கூறிய வார்த்தை என்ன ஆயிற்று? நார்மண்டியிலும், இதாலியிலும், ருஷியப் போர் முனையிலும் கடவுள் என்ன செய்துகொண்டிருக்கிறார்? பறக்கும் குண்டு ஏன் இன்னும் சர்ச்சிலின் தலையில் விழவில்லை? இதற்கெல்லாம் கடவுளே நேரில் பதில் சொல்லியாக வேண்டும். உங்கள் பேச்சைக் கேட்கத் தயாரா யில்லை.

[பற்களை நறநறவென்று கடிக்கும் சத்தம் கேட்கிறது. மூவரும் ஒருவரை யொருவர் பீதியுடன் பார்க்கிறார்கள்.]

என்ன சொல்கிறீர்கள்? கடவுளைக் கொண்டு வருகிறீர்களா? அல்லது உங்கள் மூன்று பேரையும் ருஷியப் போர்முனைக்கு அனுப்பட்டுமா?

[மூவரும் கூரை வரையில் எழும்பி ஒரு குதி குதித்துவிட்டு ஏக காலத்தில் பேசுகிறார்கள்.]

ஹிம்லர்:—கடவுளைக் கொண்டு வருகிறோம்.

கோரிங்:—கட்டாயம் கொண்டு வருகிறோம்.

கெபல்ஸ்:—இன்று சாயங்காலத்துக்குள் கொண்டு வருகிறோம்.

காட்சி 2

அன்று பிற்பகல்

[ஹிட்லரும், மூன்று மந்திரிகளும், சில ராணுவ தந்திரிகளும் நிற்கிறார்கள். ஹிட்லர் யுத்தப் படம் பார்த்துக் கொண்டிருக்கிறார். திடீர் என்று ஒரு 'படார்' சத்தம் கேட்கிறது. விளக்கு அணைகிறது. புகை சூழ்கிறது. புகையிலும் இருட்டிலும் பின்வரும் குரல் ஒலிகள் கேட்கின்றன.]

"கடவுளே!"
"இதோ இருக்கிறேன்."
"எங்கே?"
"இதோ!"
"யார்?"
"நான்தான்; கடவுள்!"
"காப்பாற்றுங்கள்."
"இதோ காப்பாற்றி விட்டேன்."

காட்சி 3

அன்று மாலை

[ஹிட்லரும் மூன்று மந்திரிகளும். எல்லாருடைய முகத்திலும் குதூகலம் தாண்டவமாடுகிறது.]

கோரிங்:—பார்த்தீர்களா? சரியான சமயத்தில் கடவுள் வந்து சேர்ந்தார்!

ஹிம்லர்:—கடவுள் நாஜிக் கட்சிதான் என்பதில் என்ன தடை?

கெபல்ஸ்:—இதோ தாங்கள் ரேடியோவில் பேசவேண்டிய பேச்சு: தயவு செய்து இதை ஒரு தடவை படித்துப் பாருங்கள். *[காகிதத்தைக் கொடுக்கிறார்.]*

ஹிட்லர் (காகிதத்தைப் பார்த்துக் கொண்டு):—இன்று பிற்பகல் ஒரு பெரும் விபத்திலிருந்து கடவுளை நான் காப்பாற்றினேன்.........

கெபல்ஸ்:—கடவுள் என்னைக் காப்பாற்றினார் என்று சொல்லுங்கள்.

ஹிட்லர்:—ஆம்; கடவுள் என்னைக் காப்பாற்றினார். ஜெர்மனிக்காகத்தான் என்னைக் காப்பாற்றினார். என்னை அவர் காப்பாற்றுவதற்கு வேறு ஒரு காரணமும் இல்லை. ஆகையால், கடவுள் என்னைக் காப்பாற்றியதை முன்னிட்டு ஜெர்மானியர் அனைவரும் உடனே சாகத் தயாராக வேண்டும்!......

காட்சி 4

இடம்: லண்டன். **காலம்:** நள்ளிரவு.

[சர்ச்சில், கிரிப்ஸ், ஈடன், ஸைமன், அமெரி, மன்ஸ்டர், காண்டர்பரி ஆர்ச் பிஷப் முதலியவர்கள்.]

சர்ச்சில்:—கடவுள் எந்தக் கட்சி என்பது நிச்சயமாய்த் தெரிந்து போக வேண்டும். அதை இனிமேல் சந்தேகத்தில் வைத்திருக்க முடியாது.

ஆர்ச் பிஷப்:—கடவுள் பிரிட்டிஷ் கட்சிதான். சந்தேகம் ஏன் வந்தது?

ஈடன்:—பின்னே, ஏன், ஹிட்லரைக் கடவுள் காப்பாற்ற வேண்டும்?

பிரிப்பது புத்திசாலித்தனமா?'' என்று கண்ணீர் விட்டுக் கேட்கும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் அதே மூச்சில், ''ஆனால், ஜின்னா இதனால் திருப்தியடையப் போகிறாரா? ஒரு நாளும் இல்லை. இந்தத் திட்டத்தினால் அவருக்கு என்ன கிடைக்கும்? இரண்டு கிழிந்த கம்பளித் துண்டுகள், — ஓரத்தில், அறுந்த நூல்கள் தொங்கும் துண்டுகள்தான் — கிடைக்கப் போகின்றன! இதை அவர் ஒப்புக்கொள்வாரா?'' என்றும் வினவுகின்றன.

அதாவது, ஜின்னா ஒரு வேளை சமரசத்தை ஒப்புக்கொண்டுவிடப் போகிறாரோ என்ற பீதியினால்தான் அவ்விதம் கேட்கின்றன! ஒப்புக்கொள்ளக் கூடாதென்று தூண்டுதலும் செய்கின்றன.

இந்த இதழ் ''கல்கி'' நேயர்கள் கைக்கு வருவதற்குள் காமன்ஸ் சபையில் அமெரியும் பேசி முடித்திருப்பார்.

மன்ஸ்டரையும் பிரிட்டிஷ் பத்திரிகைகளையும் போல் அவரும் குழப்பப் பார்ப்பார். இன்னும் சாமர்த்தியமாகவே குழப்ப முயற்சிப்பார். கடைசியில், ''இல்லை'' என்ற பல்லவியுடனே முடிப்பார்.

ஆனால் மன்ஸ்டராகட்டும், அமெரியாகட்டும், சர்ச்சிலேயாகட்டும், இனிமேல் இந்தியா விஷயத்தில் உலகத்தின் கண்ணிலே மண்ணைத் தூவி ஏமாற்றுவது இயலாத காரியம்.

காந்திஜி பேரிலும் காங்கிரஸ் பேரிலும், ''யுத்த முயற்சிக்குத் தடை செய்கிறார்கள்'' என்ற குற்றத்தை இனிமேல் அவர்கள் சுமத்த முடியாது.

இந்தியாவுக்குச் சுதந்திரத்தை மறுப்பதற்குக் கொஞ்சமாவது நம்பிக்கை உண்டாக்கக் கூடிய காரணத்தை இனிமேல் சொல்ல முடியாது.

இந்தியப் பிரச்னையைத் தீர்க்காமல் பிரிட்டிஷார் சமாதான மகாநாட்டில் தலைநிமிர்ந்து உட்கார முடியாது.

ஜனாப் ஜின்னாவினால் முஸ்லிம் பொது மக்களை இனிமேல் வெகு காலம் ஏமாற்றுவது எப்படி அசாத்தியமோ, அப்படியே பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் உலகை ஏமாற்றுவதும் இனி முடியாத காரியம்.

மேற்குறித்த பெரிய நன்மைகள் மகாத்மாவின் புதுத்திட்டங்களினால் ஏற்கனவே நமக்குக் கிடைத்து விட்டன.

சத்தியத்தையும், நல்ல நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட மேற்படி திட்டங்கள் இப்போது உடனே இல்லா விட்டாலும் கொஞ்ச நாளில் நிறைவேறியே தீரும்.

ஆகாச வெடி

''சென்னையில் பொது ஜனங்களுக்கு உருளைக் கிழங்கு சப்ளை குறைவாயிருக்கிறதென்று ராணுவ அதிகாரிகள் 5,000 பௌண்டு உருளைக் கிழங்கை விற்பனைக்குக் கொடுத்திருக்கிறார்கள்.''

—ஒரு செய்தி.

''இதேமாதிரி கருணைக் கிழங்கு விஷயமாகவும் கொஞ்சம் கருணை காட்டலாம்'' என்று ஒரு குடும்பஸ்தர் கூறுகிறார்.

★

''இந்தியப் பஞ்சக் கமிஷனுக்கு ஐந்து பேரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.''

—ஒரு செய்தி.

பஞ்சக் கமிஷனாயிற்றே என்று ஐந்தே பேர்களைத் தேர்ந்தெடுத்தார்கள் போலும்!

★

''ஜெர்மானியருக்கும் அமெரிக்கர்களுக்கும் ஓர் இரவு பூராவும் நடந்த பலமான சண்டைக்குப் பிறகு அமெரிக்கர்கள் பைசாவைப் பிடித்தார்கள்.''

—யுத்தச் செய்தி.

பணக்கார அமெரிக்கர்கள் கேவலம் பைசாவுக்காக இவ்வளவு சண்டை போட்டிருக்கத் தேவையில்லை.

★

''என்னை டாக்டர் என்று அழைப்பதைக் காட்டிலும் மிஸ்டர் என்று அழைத்தாலே போதும் என்று தாம்பரம் காலேஜில் ராஜாஜி கூறினார். ஆனால் மாணவர்கள் அவரை டாக்டர் என்றே அழைக்க விரும்பினர்.'' —ஒரு செய்தி.

ஜின்னாவின் பிடிவாதத்துக்குத் தகுந்த மருந்தைக் கொடுத்துவிட்ட ராஜாஜியை மாணவர்கள் 'டாக்டர்' என்று அழைக்க விரும்பியதில் வியப்பில்லை.

★

''ஜால்வார் சமஸ்தான சிறையில் ஒரு கைதிகூட இல்லை என்ற காரணத்தினால் சிறை காலியாக இருக்கக் கூடாதென்று ஒரு வெள்ளாட்டைப் பிடித்து அடைத்து வைத்திருக்கிறார்கள்.'' —ஒரு செய்தி.

அந்த வெள்ளாடு ஒருவேளை எப்போதாவது மகாத்மா காந்திக்குப் பால் கொடுத்திருக்குமோ?

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான ''நல்ல காரணம்'' என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஜி. ஸ்ரீநிவாசன், மாம்பலம், சென்னை.

மகாத்மாவின் முக்கிய யோசனைகளைச் சற்றுப் பார்க்கலாம் :—

1. "யுத்தம் முடியும் வரையில் சட்ட மறுப்பு ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை" என்று மகாத்மா திட்டமாய்ச் சொல்கிறார். "ஆகஸ்டு தீர்மானம் காலாவதியாகி விட்டது" என்றும் கூறுகிறார்.

இதிலே குழப்பம் என்ன இருக்கிறது? புரியாத விஷயம் என்ன இருக்கிறது? — ஒன்றுமில்லை.

இதுவரையில், ஆகஸ்டு தீர்மானத்தையும் சட்ட மறுப்பையும் சுட்டிக் காட்டியே, பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க மறுப்பதற்குச் சமாதானம் சொல்லி வந்தார்கள். காரியக் கமிட்டி அங்கத்தினர்களைச் சிறையில் வைத்திருப்பதற்கும் அதே காரணத்தைத்தான் சொல்லி வந்தார்கள். இனிமேல் அவ்விதம் சொல்ல முடியாது; சொன்னால் உலகம் நம்பாது. — மன்ஸ்டரின் மனக் குழப்பத்துக்கு அதுதான் காரணம்.

2. "யுத்தம் முடியும் வரையில் இராணுவ நிர்வாகத்தை பிரிட்டிஷாரே வைத்துக் கொள்ளலாம்; ஸிவில் அதிகாரங்களை மட்டும் இப்போது மாற்றினால் போதும்" என்றும் மகாத்மா சொல்கிறார். "அப்படிச் செய்தால், தேசிய சர்க்காரிலும் யுத்த முயற்சிகளிலும் காங்கிரஸ் ஒத்துழைக்கும்" என்றும் வாக்குறுதி கொடுக்கிறார்.

இதிலேதான் குழப்பம் அல்லது புரியாத விஷயம் என்ன இருக்கிறது? — ஒன்றுமில்லை.

ஆனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதிகளின் உள்ளத்தில் குழப்பம் உண்டாகக் காரணம் இருக்கிறது. ஏனென்றால், இதுவரைக்கும் அவர்கள், "காங்கிரஸ்காரர்கள் யுத்த முயற்சிக்குக் குறுக்கே நிற்கிறார்கள். ஜப்பானின் ஜயத்தைக் கோருகிறார்கள்" என்றெல்லாம் விஷமப் பிரசாரம் செய்து வந்தார்கள். இனிமேல் அவ்விதம் செய்ய முடியாது.

குழப்பமும் கலக்கமும் மட்டும் இல்லை; பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளின் மனதில் பீதியே உண்டாகி யிருக்கிறதென்பதற்கும் அறிகுறிகள் மன்ஸ்டரின் பேச்சில் காணப்படுகின்றன.

என்ன பீதி என்றால், "இந்தியாவின் கோரிக்கைகளை இனியும் மறுத்தல் அசாத்தியமாய் போயிருக்கிறதே, கொடுத்துத்தான் தீரவேண்டும் போலிருக்கிறதே! என்ன செய்கிறது?" என்ற பீதிதான். அது எப்படி வெளியாகிறது என்று பாருங்கள் :

"இந்த காந்தி மகா மோசமாயிருக்கிறாரே? கிரிப்ஸ் ஆசு எந்த அம்சத்தில் தோல்வி யடைந்ததோ அதையே மறுபடியும் வற்புறுத்துகிறாரே? ஸிவில் அரசாங்கம் பூராவையும் மாற்றி விட வேண்டுமாமே? வைஸ்ராயின் விசேஷ அதிகாரங்களை விட்டுக் கொடுக்க வேண்டுமாமே? இப்படியெல்லாம் காந்தி கேட்பது நியாயமா? தர்மமா? முறையா? மைனாரிடிகள் என்ன கதியை அடைவது?" என்று மன்ஸ்டர் ஓல மிட்டிருக்கிறார்.

இதிலிருந்து, இந்திய அரசியல் பிரச்னை தீராததற்கு உண்மைக்காரணம் என்னவென்று வெளியாகிறதல்லவா?

அந்தக் காரணம் சட்ட மறுப்பும் அல்ல, யுத்த முயற்சியும் அல்ல, — ஸிவில் அதிகாரத்தைக்கூட விட்டுக் கொடுக்க பிரிட்டிஷாருக்கு மனமில்லாததுதான்.

வைஸ்ராயின் விசேஷ அதிகாரக் கோரிக்கைக்கு ஊன்றுகோலாயிருப்பது மைனாரிடி சமூகங்களின் உரிமை; முக்கியமாக, ஹிந்து-முஸ்லீம் தகராறு. இந்த ஊன்றுகோலுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடப்போகிறதே என்ற பிரிட்டிஷ் பீதியும் பட்டவர்த்தனமாகி யிருப்பதைக் காண்கிறோம்.

காந்தி - ராஜாஜி திட்டத்தைப் பற்றி மன்ஸ்டர் ஏதோ நெருப்புத் துண்டுகளின்மீது நடப்பவர்போல் பேசி யிருப்பதைக் கேளுங்கள் :—

"அந்தத் திட்டம் காந்தியின் கையெழுத்துடன் ஜின்னாவுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. அத்திட்டத்தினால் ஏற்பட்ட நிலைமை கொஞ்சம் இருளடைந்து அவ்வளவு தெளிவில்லாம லிருக்கிறது. இந்தியப் பத்திரிகைகளில் அதற்கு ஒருமுகமான வரவேற்புக் கிடையாது. முஸ்லீம் லீக் கூடும்போது, நிலைமை கொஞ்சம் தெளிவாகலாம். ஆனால் இதுவரையில் சம்பந்தப்பட்ட மூன்று பேரில் ஒருவரிடமிருந்தும் வைஸ்ராய்க்கு ஒரு தகவலும் வரவில்லை."

இப்படி மன்ஸ்டர் அஞ்ஞான இருளிலே கிடந்து சுழல்கிறார். ஆனால், இருள் விலகித் தெளிவு ஏற்படவேண்டுமென்பதில் அவருக்குக் கவலை யிருப்பதாகத் தெரியவில்லை. நிலைமை தெளிந்துவிடப் போகிறதே என்ற பயந்தான் அவர் பேச்சில் தொனிக்கிறது.

இந்த பயம் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் எழுத்தில் இன்னும் பகிரங்கமாக வெளியாகிறது :

"கராச்சியிலிருந்து கல்கத்தா வரையிலும் கன்னியா குமரியிலிருந்து காஷ்மீரம் வரையிலும் இந்தியா ஒரே தேசமல்லவா? அதைப் பிரிக்கலாமா?

மானம் போகிறது!

சாயம் வெளுக்கிறது!

வன்னம் வெளியாகிறது!

வேஷம் கலைகிறது!

உள்ளே இருக்கும் கோர சொரூபம் நன்றாய்த் தெரிகிறது!

உலகம் சிரிக்கப் போகிறதே என்ற வெட்கம் வேறே வந்து முகத்தில் அசடு வழியச் செய்கிறது!

* * *

காந்தி மகாத்மாவின் புதிய திட்டங்கள் வெளியானதும், அத்திட்டங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதிகளைத் திணறித் திண்டாட வைக்குமென்று நாம் எதிர்பார்க்கத்தான் செய்தோம். ஆனாலும், இப்படி அவர்களுடைய மனதைக் குழப்பி, அறிவை மழுக்கி, பட்டப் பகலில் பிதற்றச் செய்யுமென்று எதிர்பார்க்கவில்லை!

பாவம்! ஹிட்லர் மீது குண்டு விழுந்ததையும், டோஜோ உருண்டு விழுந்ததையும்கூட அவர்களால் நன்கு அநுபவிக்க முடியாதபடி காந்திஜியின் புதிய திட்டங்கள் செய்து விட்டன!

ஜெர்மனியில் கலகமா? ஜப்பானில் அதிருப்தியா? நார்மண்டியில் முன்னேற்றமா? ருஷ்யர்கள் வார்ஸாவை நெருங்கி விட்டார்களா? — என்ன வேண்டிக் கிடந்தது போங்கள்! இந்த காந்தி இப்படிப் பண்ணி விட்டாரே? இவரை வெளியிலே விட்டது எவ்வளவு ஆபத்தாய்ப் போய் விட்டது? என்ன வெல்லாமோ சொல்கிறாரே? நமது மானத்தை வாங்குகிறாரே? புதிய சால்ஜாப்புகளைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறதே? அவற்றை உலகம் நம்ப வேண்டுமே? அமெரிக்கர் சிரிக்காமலிருக்க வேண்டுமே? சீனர் அவநம்பிக்கை கொள்ளாமலிருக்க வேண்டுமே?

இந்த மாதிரி குழப்பங்களினாலும் திகைப்புகளினாலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதிகள் திண்டாடுகிறார்கள் என்பதற்கு வேண்டிய அறிகுறிகள் சமீபத்தில் வெளியாகியிருக்கின்றன.

ஆனாலும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் என்றால் இலேசுப்பட்டவர்களா? அவர்களுடைய விழித்தல் படலத்திலேயும் ஒரு ஒழுங்குமுறை இருக்கிறது.

கூத்திலே கட்டியக்காரனை விடுவது போல், முதலில் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள் வெளியாயின.

"மிஸ்டர் காந்தியின் புதிய யோசனைகளில் புதுமை ஒன்றுமேயில்லை; அப்படிப் புதுமையிருந்தால், அவை யோசனைகளே அல்ல; அப்படி ஒருவேளை புதிய யோசனைகளாக இருக்கும் பட்சத்தில், அவற்றை மிஸ்டர் காந்தி சொல்லவில்லை; அப்படி மிஸ்டர் காந்தி அந்த யோசனைகளைச் சொல்லியிருந்தால், நம்மிடம் நேரே சமர்ப்பிக்கவில்லை; அப்படி அவர் சமர்ப்பித்தாலும், அதில் ஏதோ மோசடியான நோக்கம் இருக்கக் கூடும். எது எப்படியிருந்தாலும், இப்போதைக்கு ஒன்றும் செய்ய முடியாது" என்ற தோரணையில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதிய அருமையான அபிப்பிராயங்கள் இந்தியாவுக்கும் தந்தியின் மூலம் அனுப்பப்பட்டன.

பிறகு, பிரபுக்களின் பார்லிமெண்டு சபையில் விவாதம் நடந்தது. அறுநூறு பிரபுக்களை அங்கத்தினராகக் கொண்ட சபையில் அன்றைக்கு முப்பது பிரபுக்களே ஆஜராகித் தூங்கி வழிந்தார்களாம். மற்றவர்களெல்லாம் அவமானத்தினால் வெளியிலே தலையைக் காட்ட விரும்பாமல் வீட்டிலேயே இருந்துவிட்டார்கள் போலும்!

மேற்படி பிரபுக்களின் சபையின் விவாதத்தில் மிக முக்கியமான விஷயம் ஒன்று வெளியாயிற்று. அது என்னவென்றால், விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சலம் என்பதுபோல், இந்தியா மந்திரி பதவிக்கு உதவி இந்தியா மந்திரி பதவி என்று உண்டு என்றும், தற்சமயம் அந்தப் பதவியை வகிப்பவரின் பெயர் ஸ்ட்ரிக்லேண்டு? ... (ஸ்டாப்) மன்ஸ்டர் என்றும் வெளியாயின.

அப்பேர்ப்பட்ட லார்ட் மன்ஸ்டர் குழப்பல் தொண்டில் தம்முடைய பங்கை நிறைவேற்றினார். ஆனால் திருப்தியாக நிறைவேற்றினார் என்று சொல்ல முடியாது. தன் மனத்திலேயே குழப்பம் இருப்பதாகக் காட்டிக் கொண்டார். அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்கான மகாத்மாவின் ஏழு யோசனைகளையும் வரிசைப்படுத்திச் சொல்லிவிட்டு, "காந்தி சொல்லும் முறை சிறிது குழப்பமாயிருக்கிறது; அதை அறிந்து கொள்வது கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது!" என்று திருவாய் மலர்ந்தார்.

உண்மையில், மகாத்மாவின் யோசனைகளில் ஒருவிதக் குழப்பமும் இல்லை; குழப்பமெல்லாம் மன்ஸ்டரின் மனத்திலேதான் இருக்கிறது!

மாற்றல் நல்லது

அரசியல் கைதிகள் அலிபுரம் சிறையில் படும் மற்ற அவதிகளையும் ஸ்ரீ சா. கணேசன் சாங்கோ பாங்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

அரசியல் கைதிகளுக்குப் பல் தேய்க்கப் பல்பொடி கிடையாதாம்; கல்பொடி தானும்! தலைக்கு எண்ணெய் கிடையாதாம். நெற்றிக்கு இட்டுக் கொள்ள விபூதி குங்குமம் ஒன்றும் கிடையாதாம். சாப்பாட்டைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. கேழ்வரகையே கண்டறியாதவர்கள் இன்று நூறு பேருக்கு மேல் அலிபுரம் சிறையில் 'களிப் படி' சாப்பிட்டு வருகிறார்கள். பந்துக்களுக்குக் கடிதம் எழுதலாம் என்ற சர்க்காரின் உத்தரவுக்கு, சிறை அதிகாரிகள் 'கடிதம்' என்றால் கார்டு என்று வியாக்யானம் செய்து, கார்டு மட்டும் கொடுக்கிறார்களாம். அதிலும் மூத்திரை அடித்துப் பாதி எழுத்தை மறைத்து விடுகிறார்களாம். ஒரு சமயத்தில் ஆறு புத்தகங்களுக்கு மேல் வைத்துக் கொண்டால் அஜீரணமாம்! — இந்த அர்த்தமற்ற நிர்ப்பந்தங்களுக் கெல்லாம் ஒருவாறு சிறை அதிகாரிகளே காரணமென்று ஏற்படுகிறது.

மேற்படி கஷ்டங்களை யெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டும் என்று நாம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளவில்லை. காந்திஜியின் அறிக்கையினால் ஏற்பட்டிருக்கும் புது அரசியல் நிலைமையை முன்னிட்டு, எல்லா அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய்ய வேண்டுமென்றுதான் வற்புறுத்துகிறோம்.

மகாத்மாவின் கோபம்

காந்தி மகானுக்கு மனிதர்களின் மீது கோபம் வருவதில்லை; இரக்கந்தான் உண்டாகும். ஆனால், மனிதர்களின் அக்கிரமச் செயல்களின் மீது சிலசமயம் அசாத்தியமான கோபம் பிறந்துவிடும். அம்மாதிரி சமீபத்தில் பம்பாய்ப் பத்திரிகை ஒன்றின் மீது காந்திஜிக்குக் கோபம் பிறந்தது. அந்தக் கோபத்தை மேற்படி பத்திரிகையின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் வெளிப்படுத்தினார்.

"உம்முடைய கேள்வி ஒவ்வொன்றுக்கும் நான் சரியான பதில் சொல்ல முடியும். ஆனால் நீர் உண்மை உள்ளத்துடன் கேள்வி கேட்டதாக எனக்குத் தோன்றவில்லை. உம்முடைய வீராப்பை விளம்பரப் படுத்திக் கொள்வதற்காகவும், கேவலமான பத்திரிகைப் பிரசாரத்திற்காகவும்தான் கேட்டிருக்கிறீர் என்று நான் கருதுகிறேன்."

"பத்திரிகைத் தொழிலில் நீர் வேண்டிய பொருள் சேர்த்தாகிவிட்டது. இனியாவது, யோக்யமாகப் பத்திரிகை நடத்தக் கூடாதா? முடியாதென்றால் பத்திரிகை வேலையையே விட்டுவிட்டு, வேறு தொழில் பார்த்துக்கொள்ளவும்" என்று இம்மாதிரி தோரணையில் காந்தி மகான் எழுத வேண்டுமென்றால், அவருக்கு எப்பேர்ப்பட்ட கோபம் வந்திருக்க வேண்டுமென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம்.


கோபத்தின் காரணம்

அப்படிப்பட்ட கோபம் மகாத்மாவுக்கு ஏற்படும்படியாக அந்தப் பத்திரிகை என்ன அக்கிரமம் செய்தது என்றால், ராஜாஜியை வரம்பின்றித் தாக்கி, அவர் காந்தி மகானை ஏமாற்றி விட்டார் என்றும் பொருள்பட எழுதியிருந்ததுதான். இதைப் பற்றிய மகாத்மாவின் அமுத மொழிகள் வருமாறு:—

"உமது 12—7—44 இதழை மிகவும் வருத்தத்துடன் நான் படித்தேன். அதில் ராஜாஜியைப் படுமோசமாகத் தாக்கி யிருப்பதுடன், மற்றும் பல பிரமுகர்களையும் தாக்கி யிருக்கிறீர்கள். ராஜாஜி சுயநல நோக்கம் எதுவும் அறவே இல்லாதவர். தேச நலத்துக்காக சகலத்தையும் தியாகம் செய்த உத்தமர். பொது ஜனங்களின் பிரீதியை இழந்தாலும் பாதகமில்லை யென்று மனச்சாட்சியின்படி நடக்கத் துணிந்தவர். அத்தகைய உத்தமரைக் கேவலமாகத் தாக்குவதினால், நீர் உமக்கே அநீதி இழைத்துக் கொள்வதோடு, தேசத்துக்கும் அவமானம் விளைவிக்கிறீர்!"


மேற்படி பம்பாய்ப் பத்திரிகையைப் போலவே ராஜாஜியைக் கேவலமான முறையில் தாக்கிய பத்திரிகைகள் சென்னையிலும் இல்லாமற் போகவில்லை. அவர்களிடம் இல்லாத தேசபக்தியையும் காந்தி பக்தியையும் இருப்பதாக விளம்பரப்படுத்திக்கொள்வதற்காகவே அப்பத்திரிகைகள் அவ்வாறு ராஜாஜியைத் தாக்கின. மேலே எடுத்துக் காட்டிய மகாத்மாவின் மொழிகள் மேற்படி சென்னைப் பத்திரிகைகளுக்கும் பொருந்துவனவாகும். பிரஸ்தாப பம்பாய்ப் பத்திரிகை மகாத்மாவின் கடிதத்தினால் மனம் திருந்தி மன்னிப்பும் கேட்டுக் கொண்டதினால் தன் கௌரவத்தை நிலைநாட்டிக் கொண்டது. தவறு செய்தாலும் அதை உணர்ந்து திருத்திக் கொள்வதற்குத் தைரியம் வேண்டுமல்லவா?

-உர்மான்



ஹிட்லர் குண்டு விபத்துக்குத் தப்பிய பிறகு,
அவரை முஸோலினி போய் பார்த்தாராம்.
ஜப்பான் மாஜி பிரதம மந்திரி டோஜோவுக்கும்
விபத்து நேர்ந்தது!
ஜப்பான் மந்திரிசபை

நிகழ்ச்சிச் சித்திரம்



கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 42

என்ன சேதி?

"கல்கி" விலை

"கல்கி"யின் விலையும் சந்தாவும் முன்போலவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பத்திரிகை விலைக் கட்டுப்பாட்டு உத்தரவை சர்க்கார் ரத்து செய்திருப்பதினால் "கல்கி"யின் விலையை மாற்ற முகாந்திரம் எதுவும் இல்லை. ஏற்கனவே, நாலணா விலைக்குத் தகுந்தபடியாகத்தான் நாம் "கல்கி"யை நடத்தி வந்திருக்கிறோம். சர்க்கார் சட்டப்படி நாம் வெளியிடக் கூடிய விளம்பரத்தைக் காட்டிலும் மிகக் குறைவாக விளம்பரங்களை வெளியிட்டு, விஷயப் பக்கங்களை அதிகமாகக் கொடுத்து வந்திருக்கிறோம். நாலணா விலையுள்ள வேறெந்தப் பத்திரிகையைக் காட்டிலும் "கல்கி"யில் அதிக விஷயங்கள் எப்போதும் வெளியாகி வந்திருக்கின்றன.

விலை விதிகள் ரத்து செய்யப்பட்ட காரணத்தினால், இவ்வளவு பக்கந்தான் போடலாம் என்ற நிர்ப்பந்தம் ஒழிந்தது பற்றிச் சந்தோஷப்பட வேண்டியதுதான். எனினும், அந்த சந்தோஷத்தை நாம் அநுபவிப்பதற்குத் தடையாகக் 'கோட்டா' முறையும் காகித கிராக்கியும் குறுக்கே நிற்கிறது. சர்க்கார் இப்போது அளந்து கொடுக்கும் காகிதத்தைக் கொண்டுதான் பத்திரிகையை நடத்தவேண்டும். ஜனங்களிடம் பத்திரிகைகளுக்குள்ள செல்வாக்கை யனுசரித்துக் 'கோட்டா' கொடுக்கும் முறை இன்னும் அநுஷ்டானத்துக்கு வரவில்லை. ஆயினும், அடுத்த மாதத்திலிருந்து சர்க்கார் காகிதக் கோட்டாவை ஓரளவு உயர்த்தித் தரப் போகிறார்களாம். அந்த அளவுக்கு நாமும் அடுத்த இதழிலிருந்து பத்திரிகைப் பக்கங்களை அதிகமாக்க எண்ணியிருக்கிறோம்.

மீசை மர்மம்

செட்டிமார் நாட்டின் சிறந்த தேசபக்தத் தொண்டரும் தலைவருமான ஸ்ரீ சா. கணேசன் இரண்டு வருஷத்துக்கு முன்பு சிறைக்குப் போனபோது, அவருடைய முகம் வழுவழு வென்று இருந்தது. இந்த மாத ஆரம்பத்தில் அவர் அலிபுரம் சிறையிலிருந்து விடுதலையாகி வெளி வந்தபோது, முகத்தில் இருபுறமும் நீண்டு வளர்ந்த மீசை காட்சியளித்தது. அவரை வரவேற்ற நண்பர்கள் "இது என்ன கூத்து?" என்று வியந்தார்கள். "ஸ்டாலின் ஜகதீசன்" "ஸ்டாலின் சீனிவாசன்" என்று ஏற்கனவே இருவர் இருக்கும்போது, இவரையும் "ஸ்டாலின் கணேசன்" என்று அழைக்க வேண்டியதுதான் என்று சிலர் தீர்மானித்தார்கள். இருந்தாலும், சா(தாரண) கணேசன் மீசை கணேசனாக மாறியதன் மர்மம் தெரியவரவில்லை. அலிபுரம் சிறையில் அரசியல் கைதிகள் படும் அவதிகளைப் பற்றி அவர் விடுத்த அறிக்கையைப் படித்த பிறகுதான் விஷயம் தெரிந்தது. அலிபுரம் சிறையில் க்ஷவரம் செய்து கொள்வதற்காக அதிகாரிகள் கொடுக்கும் 'கத்தி' என்ற பெயருடைய இரும்புத் தகட்டுக்குப் பயந்து கொண்டுதான் அவர் மீசை வளர்த்தாரென்று வெளியாயிற்று! முகவாய்க் கட்டையும் பிழைத்துப் போகட்டுமென்று தாடி வளர்க்கப் பார்த்தால், அதற்குச் சிறை அதிகாரிகள் குறுக்கே நின்று தாடியைக் கட்டாய க்ஷவரம் செய்து விட்டார்களாம்! எனவே, ஸ்ரீ சா. கணேசன் மூக்காவது தப்பட்டுமென்று மீசை வளர்த்தாராம்! — இதெல்லாம் நாம் அவரது முகத்தைப் பார்த்தும் அறிக்கையைப் படித்தும் செய்து கொண்ட ஊகங்களேயாகும்.

மயிலை சங்கீத சபா - மயிலாப்பூர்



6-8-1944 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6 மணிக்கு

பிரபல ஹிந்துஸ்தானி பாடகி

பம்பாய்
ஸ்ரீமதி கேஸரிபாய்

பாட்டுக் கச்சேரி

●

சென்னையில் முதல் முதலாக நடக்கும் உயர்ந்த ஹிந்துஸ்தானி இசை விருந்து!

டிக்கெட் விவரங்கள்: ரூ. 10, ரூ. 5, ரூ. 3, ரூ. 1.

S. சத்யமூர்த்தி, M. D. கிருஷ்ணமூர்த்தி,
கௌரவ காரியதரிசிகள்.

பொன் விழா வைபவம்

(60-வது நாள்)

★

திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில்

30-7-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு

திருச்சி ஜில்லா கலெக்டர் W. H. மிச்சல், B. A. அவர்கள் ஆதரவிலும் முன்னிலையிலும்

காரைக்குடி ஸ்ரீ ராம பால கான விநோத சபையாரின்

திருமழிசை ஆழ்வார்

புராண நாடகம்

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 } இதழ் 42 }

1944 ஜூலை 30

{ தாரண ௵ ஆடி 15

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



மகாத்மா காந்தி உடல் நலங் கருதித் தங்கியுள்ள பஞ்சகனியிலிருந்து இரண்டு அற்புத நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகள் வந்தன. ஒன்று, ராஜாஜியின் திட்டத்தை மகாத்மா ஒப்புக்கொண்டது. இரண்டாவது, மகாத்மா மருந்து சாப்பிட ஒப்புக்கொண்டது. ராஜாஜி திட்டத்தை ஒப்புக்கொண்டதைக் காட்டிலும் மகாத்மா மருந்து சாப்பிட ஒப்புக்கொண்டதே பெரும் அற்புதமாகும். இயற்கை வைத்தியத்தில் நம்பிக்கையுள்ள மகாத்மாவுக்கு மருந்து என்றும் பிரிட்டிஷ் ஆட்சியைக் காட்டிலும் கசப்பு. இலேசில் அவர் மருந்து சாப்பிட ஒப்புக்கொண்டு விடவில்லை. வைத்தியர்களை எவ்வளவோ கேள்வி கேட்டு, எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடத்திய பிறகுதான் ஒப்புக்கொண்டார். மகாத்மாவின் உடல் நலிவுக்குக் காரணமான நோய்க் கிருமிகளை 'மைக்ராஸ்கோப்' என்னும் அணுதரிசினியின் அவரே கூர்ந்து பரிசோதிக்கும் காட்சியை இந்த இதழ் அட்டைப் படத்தில் காணலாம். எந்த விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து முடிவு காணும் மகாத்மாவின் விஞ்ஞான மனப்பான்மையும் இந்தக் காட்சியிலிருந்து வெளியாகிறது.


வருகிறது!
சின்னப்பா
கண்ணும்பா
கிருஷ்ணன் . .
மதுரம் . . . .
சரோஜா . . . .
மீனலோசனி
நடிக்கும்
மஹா மாயா
JUPITER PICTURES
மஹா மாயா
S.I.P ரிலீஸ்
டைரக்ஷன்: T.R. ரகுநாத் ♦ இளங்கோவன் • ஸ்டுடியோ: நியூடோன்

சிறுவர்களுக்கு கொடுக்கும் ஒவ்வொரு பதார்த்தங்களையும் அதிக ஊக்கமளிக்கக்கூடியவைகளாகச் செய்யுங்கள்!





சிறுவர்களுக்கு சாப்பாடு தயாரிக்குமுன் அதிக சக்தியையளிக்கக்கூடிய உணவு தேவை யென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உணவுகள் பலத்தைக் கொடுக்கக்கூடிய அளவில் வித்தியாசப்பட்டிருப்பதால், சிறுவர்கள் அவ்வப்போது சாப்பிட்டாலும், அவர்களுக்கு போதிய அளவிற்கு வேண்டிய ஊக்கம் கிடைப்பதில்லை. ஒவ்வொரு விதமான உணவையும் அதிக ஊக்கமளிக்கக்கூடியவையாகச் செய்யலாம் — வைடமின் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்யுங்கள். குடும்பச்சாப்பாடு டால்டாவினால் சமையல் செய்தால் சக்தி குறைவிற்கு பயமே கிடையாது — ஏனென்றால் இந்த உயர்ந்த சமையல் பதார்த்தத்தில் இயற்கையின் பலத்தைக்கொடுக்கக்கூடிய முக்கிய ஆகார சத்துக்களிருக்கின்றன. உணவைச் சாப்பிடுவதற்கு டால்டா தனி ருசியைக்கொடுக்கிறது — மேலும் அது தாவரப் பொருள்தான்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்கவேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும்) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. Dept. E133 P.O. Box No.353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்ப் அனுப்புங்கள்.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.